உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விசேஷ
விளம்பரத்திற்கு!

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௧] யாழ்ப்பாணம்:— விஷு ௵ வைகாசி௴ ௧௫ ௨ (1941 மே 29 வியாழக்கிழமை) [இலக்கம் ௧௪]

அன்னை தயை

தென் புலோலியூர், திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள்

அன்னை தயையு மடியான்
 பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்
 பொறையும்—வனமுலை
வேசி துயிலும் விறன்மந்
 திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்.

இந்தப் பாட்டின் பொருளைப் பின் பார்க்கலாம்; ஓசையைப் படித்துப் படித்துப் பாருங்கள். இன்பம் பெருக்கும் ஒழுகிய ஓசையையுடையது என்று கூறிவிடலாம். செவிவாயாக உணரவேண்டிய ஓசை நயத்தை எழுதின் வாயிலாக விளக்குவது சாலாது. எனினும், ஒருசில கூற விரும்புகிறேன். முதலில் "அன்னை" யென்று தொடங்குகின்றது பாட்டு. "தாய்" என்னும் "அன்னை"தானே! "தாய்" என்று, ஆசிரியர், ஏன் கூறாது விடுத்தார்? "தாய்" என்று கூறிவிட்டால் தான் பின் கூறப்புகும் "தயை"யின் பண்பை முன்னாக வரும் எழுத்துக்கள் குறியா என்பது அவர் கருத்து. "அன்னை" எனும் பொழுதே மென்னீர்மையும் மலர்ச்சியும் இரக்கமும் எம்மிடத்தும் இருக்கக் காண்கிறோம். காமினியாமலை பிருக்க, திருத்தக்க தேவர் பாடிய

"கனியின் பிணைகன் றிடுமென்
 றகன்று
நிலையின் விழலவ் வயினின்
 மையினுக்
கினியின் விழுறு னதநின்
 றகொடுத்
தலையும் வெயிலின் றருதும்
 முகவோய்"

என்ற பாட்டுகள் போன்றவை எம் மனத்தில் ('கன்றிடுமென்று கசிந்து' எனவே இரக்கம் ஒலியுருவாகிப் பாய்கின்றது.) தோன்றும், னகர, மகர, ககரவொற்றுகள் இரக்கக் குறிப்பினைக் காட்டுவன என்பது மொழி நூல்-நுண்ணறிஞர்-வல்லார் துணிபு. இந்தப் பாட்டின், இனிமைக்குக் காரணங்கள் பல. வல்லொற்று ('மலர்ப்பொன்' என்ற இடத்தன்றி) வரவில்லை. அங்கும் முன்னாக நிற்கும் மகர ஒலிகளும் பின்னாக நிற்கும் னகரவொற்றும் வலிமையைக் கெடுத்து மென்மையைப் பயக்கின்றன.) அன்னை-தயை-பணி-மலர்-பொன் - அழகு-புவி-வனம் - உலை - வேசி-துயில்-விறல்-மந்திரி-மதி-பெண் ஆகிய சொற்கள் யாவும் இனிய ஓசை நயத்தனவாகும். இவை யாவற்றையும், யான், 'எழுத்தாற்றல்' எனக்கூற விரும்புகிறேன். எழுத்தாற்றல் என்னும், செவி உணரும்-ஒலியே உருவாக்கப்பட்ட-எழுத்துக்களிற் கொள்ளப்படும்-கருத்து வன்மை என்க. சொல்லாற்றல் வேறு; அதைப் பின் பார்ப்போம்.

இப்போது, யான் கண்ட உரையைக் கவனிக்கலாம். நீதிவெண்பாவில் உள்ளது இங்கே எடுத்துக் கொண்ட பாட்டு. அதன் ஆசிரியர் பெண்ணுக்கு அமைய வேண்டிய குணங்களை ஆராய்ந்து கூறவிலர். செய்யுட் குறிப்பாகத் தொல்காப்பியனார் முப்பத்து நான்கு உறுப்புகள் கூறினரல்லவா? அக்கோக்குப் பற்றி யான் ஒன்றும் கூறப்புகவில்லை. 'கவிப்பிதயம்' எது வென ஆராய்ந்து காண்பதென்றே ஈண்டு எடுத்துக் கொண்ட இறையாகும். "பேசில்-ஆராய்ந்து கூறுமிடத்து, அன்னைதயையும்-தாயின (அன்பு போன்ற) அன்பும், அடியாள் பணியும்-தாசி (அடியவள்-புரியும் தொண்டு போன்ற) தொண்டும், மலர்ப்பொன்னின் அழகும்-செந்தாமரை மலரில் இருக்கின்ற திருமகளின் (அழகுபோன்ற) அழகும், புவி பொறையும்-பூமியின (பொறுமை போன்ற) பொறுமையும், வனமுலை வேசி துயிலும்-அழகு உலக்கின்ற கணிகையின் (நித்திரை போன்ற) நித்திரையும், விறன் மந்திரி மதியும்-வலிமை பொருந்திய மந்திரியின் (அறிவுபோன்ற) அறிவும், -ஆகிய-இவை உடையாள் பெண்-இவைகளை உடையவளே பெண்ணாவாள்" என்பது கூறத்தக்க கருத்து எனக் கவிஞர் செப்பியதாகும்.

தாயினும் மிக்க அன்புடையர் இல்லையாதலால் "அன்னை தயை" என்றார். ஆயின், தாயின அன்புக்கு உவமையாக அரசனின் அன்பும் கடவுளின் பேரருளும் குறிக்கப்படுவதுண்டு. தசரதச் சக்கரவர்த்தியைப் பற்றிக் கூறப்புகுந்த கம்பநாடர் "தாயொக்கு மன்பில் தவமொக்கும் நலம்பயப்பில்" என்று கூறினர். 'தாயாய் முலையைத் தருவாளைத் தாரா தொழிந்தாற் சலியாய், சாவேன் கழிந்து போவேனோ கூவி விளித்தான் கல்குதிபோல்" என்றும் "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே" என்றும் "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த செல்வமே சிவபெருமானே" என்றும் "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்றும் அன்புருவானை அமிழ்தத்திற் கூறுகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரே "தாயினும் நல்ல தலைவர்" என்றும் "தாயு நீயே தந்தை நீயே சங்கரனே" என்கிறார். அப்பர் பெருமான "தாயவன் காண் உலகுக்குத் தன்னொப்பில்லாத் தத்துவன் காண்" என்று புகல்கின்றார். "அன்னைதயை" என்று இருப்பதில் "தயை-கிருபை" ஆதலால "பெண்" என்பாட்டின் கடையில வருவதற்குப் பொருள் "மனைவி" என்றல் தகாது; அது பெண்ணாப்பிறந்தாரைப் பொதுவாகக் குறிப்பதாயிற்று என மறுத்தலுமாம்.

அடியவள் போலப் பயபக்தியுடன் தொண்டு செய்தல் வேண்டுமென்பர் "அடியாள் பணி" என்றார். அடியாள்-தாசி, பணிப்பெண். "அடியாள் பணி" என்ற சொற்றொடருக்கு "பணிப்பெண் (பணிவோடு பேசும் பேச்சுப் போன்ற) பேச்சு" என்றும் "அடியவள் (செய்யும் வணக்கம் போன்ற) வணக்கம்" என்றும் பொருள் கூறினுமாம். "அடியவள் (அணியும் அணிகலன் போன்ற) அணிகலன்" என்றும் பொருள் கூறலாம். கந்தபுராணத்து "கனிய காதலன் முன்கடை கிறபவர் நலம்பெறப் புனைகின்றோர்" கூடாத மகளிரென்றும், காசிகாண்டத்து "எரிமணிப் பொலம் பூண்சுமந்தின்னுயிர்க்குரிய கேள்வருவப்ப முன்னையவார், பிரியுங் காலைய பெய்கலன் பாவைபு, மொருவி மாசுட னுண்டிட வைகுவார்" கற்பெண்டிர் எனவும் இருப்பன மேற்கூறப்பட்ட கருத்துக்குத் துணைசெய்வன போலும்.

மாட்சி (அழகும் கல்விலக்கணங்களும்) பெண்களுக்கு உடைமையாதல் வேண்டுமென்பார் "மலர்ப்பொன்னின் அழகு" என்றார். திருமகளைப் போன்ற அழகுடைமை மாட்சிமையுடைமை யெனினுமாம். "அழகு" எனப்பட்டபோதே-அதற்கு உரித்தாய பத்து அழகுங் கருதப்பட்டவாறுபோல - பெண்களுக்குரிய - 'மணமாட்சி' 'கற்பெனுந்திண்மை' முதலாய - அழகுகள் யாவும் உடன் கருதப்பட்டனவாம். "செம்பொன்னின் (அழகு போன்ற) அழகு" எனப் பொருள் கூறலும் சிறப்புடையதாம். பொன்னின் அழகில் "சுடச் சுடர்தல்" தானும் சேர்க்கப்படுவதாகும். "சுடினுஞ் செம்பொன் தன்னொளி கெடாது" என்றார் பிறரும். "மலர்ப் பொன்னின் அழகு-செம்பொன் (போன்ற நிதலை) அழகு" எனினுமாம்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

பம்பாய்க் கலகத்தில் 11 பேருக்கு உயிர்ச் சேதம்

நான்கிடங்களில் துப்பாக்கிப் பிரயோகம்

கட்டிடத்துக்குத் தீ வைக்க முயற்சி

பம்பாய், மே 23

இன்று மாலை பம்பாயில் நான்கிடங்களிற் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யவேண்டிய அவசியமேற்பட்டது. ஜனக் கூட்டத்தினர் கட்டுக்கடங்காமற் பொலிஸார்மீது கல்லெறிந்ததாற் பொலிஸ் காரர்கள்மூவருக்குக் காயம்பட்டது. ஹெட் கொன்ஸ்டபிள் ஒருவர் பலத்த காயமடைந்ததால் ஆஸ்பத்திரியிலேயே தங்கிச் சிகிச்சை பெறுகிறார்.

இன்று காலை நான்கு பேர்களும் மாலையில் நான்கு பேர்களும் குத்தப்பட்டனர். மொத்தம் இன்று 35 பேர் கத்திக்குத்துக் காயத்துடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர். ஆலைப் பிரதேசம் அமைதியாகவே யிருக்கிறது.

11 பேர் மாண்டனர்

நேற்று ஆரம்பித்த கலவரத்தால் இதுவரை 11 பேர்கள் கொல்லப்பட்டுப் போயினர். 90 பேருக்கு மேற் காயமடைந்தனர். இன்று பகலிலிருந்து நடுராத்திரிவரை கலகம் ஓயாமல நடந்தது. பலவிடங்களில் இருவகுப்பினரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். இன்று கத்துண்டவர்களில் ஒருவர் தான் இறந்தார். இறந்துபோன மற்றும் 10 பேர் நேற்றுக் குத்தப்பட்டவர்கள். ஒரு கட்டிடத்துக்குத் தீ வைக்க முயன்ற ஐந்துபேர் இன்று கைதுசெய்யப்பட்டனர்.

இடுகாட்டிலிருந்து பிரேத ஊர்வலத்தினர் திரும்புகையில் வழியில் உட்கார்ந்திருந்த இருவரை ஊர்வலத்திலிருந்து சிலர் திடீரெனக் கத்தியாற் குத்திவிட்டனர். ஊர்வலத்தோடு சென்ற இராணுவப் பொலிஸார் அவர்களை வளைத்துக்கொண்டு அவர்களிடம் கத்திகள் இருக்கின்றனவா எனச் சோதித்தனர். ஒருவரிடம் இரத்தம் தோய்ந்த கத்தி யிருந்தது. மற்றொருவர் தன்னிடமிருந்த கத்தியை எறிந்துவிட முயன்றார். இவர்களிருவரும் கைது செய்யப்பட்டனர். ஒருவரைக் குத்திவிட்டுச் சயிக்கிளேறி ஓட முயன்ற ஒருவரைப் பொலிஸார் துரத்திப்பிடித்துவிட்டனர்.

ஜனநடமாட்டமில்லை

மாலைநேரத்தில் வண்டிகளிலும் பஸ்களிலும் கூட்டம் அதிகமாகவிருந்தது. இரவில் நடமாடக்கூடாதென்ற உத்தரவு நடைமுறையிலிருந்ததாற் சீக்கிரம் வீடுபோய்ச் சேரக் கோட்டைப் பிரதேசத்தில உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் தீவிரமாக விரைந்து சென்றனர். ஜனநடமாட்டம் மிகுந்திருக்கும் இடங்களிலும் இன்று ஜன நடமாட்டமேயில்லை. யுத்த நிமித்தம் தேசப் பாதுகாப்புப் படைகளைச் சேர்த்தவர்கள் ஏறக்குறைய 250 பேர் கலகப் பிரதேசத்தில அமைதியை நிலைநிறுத்த வேலைசெய்வதை அரசாங்கத்தார் பாராட்டி அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

• மற்றவிடங்களில்

டாக்கா கலவரத்தைப்பற்றி விசாரிக்க வங்க அரசாங்கத்தால நியமிக்கப்பட்ட நிர்வாக சபைக்கு ஜஸ்டிஸ் மெக்னீர் தலைமைவகிப்பார். ஆமதாபாதத்தில் இன்னும் ஒருவர் குத்தப்பட்டார். இதற்காக மூவர் கைது செய்யப்பட்டனர். பலர் அச்சங்கொண்டு ஊரைவிட்டுப் போயிருக்கின்றனர்.

சத்யாக்ரஹத்தின் பிற்காலநிலை

மகாத்மா விளக்கம்

பிருத்தானியர் கொள்கை மாறாது

நாகபுரி, மே 22—

ஹிந்து பத்திரிகையின் நிருபர் மகாத்மாவைப் பேட்டிகண்டு பேசியபோது அவர் கூறியதாவது:—

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியாவுடன் ஒருவித ஒப்பந்தத்துக்கு வரமாட்டார்கள் என்றே தெரிகிறது. அவர்கள் வழக்கம்போல தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டேயிருப்பார்கள் என்று நினைக்கிறேன். இப்போது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் அவர்கள் தங்கள் வழக்கமான கொள்கையைக் கைவிடுவதாகக் காணும். இந்தக் காலத்தில் சன்மார்க்க தத்துவத்துக்கு மதிப்பில்லையானாலும், முடிவில் அதுவே வெற்றிபெறும். காங்கிரஸ் சன்மார்க்க தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டு நடக்கிறது. அதன் பயன் காலக்கிரமத்தில் தான் தெரியும்.

வகுப்புக் கலவரம்

காலாடிகளை அடக்கக் காங்கிரஸ் தன் செல்வாக்கை உபயோகிக்கவில்லை யென்பதை நான் குறிப்பாகச் சொன்னது உண்மையே. பொதுஜனங்கள் காலாடிகளுக்குப் பயப்படும் காலம் போகவேண்டும். அந்தப் பயத்தைப் பலாத்கார முறையினாலோ அஹிம்ஸா முறையிலோ எவ்விதத்திற் போக்கிக் கொண்டாலும் சரியே. அவ்விதம் செய்தால்தான், நாம் பிரிட்டிஷ் சக்தியை மட்டுமின்றி உலகத்தின் சக்தியை எதிர்த்துப் போராடமுடியும். நாகரீகவாழ்க்கையின் முதல் தத்துவம் காலாடிகளைச் சமாளிக்கப் போதிய ஆற்றல் வகிப்பதேயாகும்.

சத்தியாக்ரஹிகள்

நான் இனிச் சத்தியாக்கிரஹிகளின் புதிய நாமாவளியை அங்கீகரிக்கப் போவதில்லையெனச் சொன்னது உண்மையே. ஆனால் வகுப்புக் கலவரம் நடக்கும் இடங்களிலும் கைதியாகாத சத்தியாக்கிரஹிகள் அதிகமாகவுள்ள இடங்களிலும் தான் சத்தியாக்கிரஹத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்போகிறேன். சிறையிலிருந்து வெளிவந்த சத்தியாக்கிரஹிகள் சட்டமறுப்பு ஆரம்பித்ததன் நோக்கம் நிறைவேறுமவரை அவ்வப்போது சத்தியாக்கிரஹம் செய்து தொடர்ந்தாற்போல சிறை சென்று வருவார்கள்.

ஸ்ரீமதி விஜய்லக்ஷ்மி பண்டிதர்

சிறை செல்ல அனுமதி

நைனிடால், மே 22—

ஐக்கிய மாகாண அரசாங்க மந்திரியாக விருந்த ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிதர் சிறை செல்ல அரசாங்கத்தார் அனுமதித்துவிட்டனர். இன்னும் ஒரு மாத காலத்தில் அவர் பிரயாணப்படுவார் எனத் தெரிகிறது. அவர் சீன ஸ்தானிகரை முன்னதாகக் கலந்து பேசுவதாகச் சொன்னார்.

குண்டர்களுக்குப் பயந்து ஓடுவது கோழைத்தனம்

கலவரத்தின்போது காங்கிரஸ்காரர் செய்யவேண்டியதென்ன?

ஆமதாபாத் மே 23

"குண்டர்களுக்குப் பயந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஜனங்கள் ஓடுவது சகித்துக் கொள்ள முடியாதது. பலாத்காரம் அல்லது சாத்விக முறையில் குண்டர்களை எதிர்த்து நிற்கும் திறமை மக்களுக்கு இருக்க வேண்டும். காங்கிரஸின் லக்ஷியத்திற்கு நான் கூறும் அர்த்தம் சரியானால், காங்கிரஸும் காங்கிரஸ் காரர்களும் சாத்விக எதிர்ப்புமுறையே கையாளலாம். அதில் அவர்கள் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். ஆனால், பயந்து ஓடுவது கோழைத்தன மென்பதை நாம் வியக்தமாகச் சொல்லிவிட வேண்டும். சாத்விக எதிர்ப்புத்தான் சரியானது. ஆனால், அவ்விதம்செய்ய முடியாவிட்டாற் பலாத்காரமுறையிலாவது எதிர்க்க வேண்டியது கடமையாகும்."

மேற்கூறியவாறு மகாத்மாகாந்தி காங்கிரஸ்காரர்களுக்கு வழிகாட்டி குஜராத் மாகாணக்காங்கிரஸ் கொம்மிற்றிக் காரியதரிசியான ஸ்ரீமான். போகிலால் லாலாவுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்திற் குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் கடிதத்தை ஸ்ரீமான் மஹாதேவதேசாய் காந்திஜியிடமிருந்து கொண்டு வந்தார்.

ஜவஹருடன் மந்திரிமார் நடத்திய பேச்சு

அரசாங்கசபையில் உத்தியோக அறிக்கை

மந்திரிசபைக்கும் பண்டித ஜவஹர்லால்நேருவுக்குமிடையில் நடைபெற்ற சம்பாஷணைகளின் உத்தியோக முறையான அறிக்கை நாளை அல்லது இவ்வாரத்தில் மற்றொரு தினத்தில் அரசாங்கசபையிற் சமர்ப்பிக்கப்படுமென்று அறியப்படுகிறது.

மந்திரிசபைக்கும் பண்டித ஜவஹர்லாலநேருவுக்கு மிடையே நடைபெற்ற சம்பாஷணைகளைப் பற்றிய குறிப்புக்கள் அல்லது அறிக்கையையும் இந்திய இலங்கை உறவுபற்றி இச்சம்பாஷணையின் போது ஏதாவது தற்காலிகமான ஒப்பந்தஞ் செய்திருந்தால் அதன் பிரதியையும் கூடிய விரைவில் சமர்ப்பிக்கவேண்டும் என்று அரசாங்க சபையின் தலவாகலைப் பிரதிநிதியான திரு. எஸ். பி. வைத்தியலிங்கம் மார்ச்சு 28-ந் திகதியன்று அரசாங்கசபையிற் பிரேரித்தார். இத்தீர்மானத்தை மந்திரிசபை ஆலோசனை செய்த பின்னர்க் குறித்த பத்திரங்களை அரசாங்க சபையிற் சமர்ப்பிக்கத் தீர்மானித்திருக்கிறது.

மந்திரிசபை அதன் உபதலைவரான ஸேர் பரன் ஜயதிலகாவை மேற்படி பத்திரங்களை அரசாங்க சபையிற் சமர்ப்பிக்கும்படி கேட்டிருக்கிறதென்று அறியப்படுகிறது.

பண்டித ஜவஹர்லாலநேரு 1939 ஆண்டு ஜூலை 18-ந் திகதி மந்திரிமாரை அரசாங்கசபைக் கட்டிடத்திலுள்ள மந்திரிசபையின் மகாநாட்டு அறையிற் சந்தித்தார். மூன்று மணிநேரம் சம்பாஷணை நடைபெற்றது. அரசாங்க அதிகாரிகளும் வந்திருந்தனர். ஆயினும் அவர்களை உள்ளே அழைக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

ஜூலை 20-ந் 24-ந் திகதிகளிலும பண்டித ஜவஹர்லால் நேரு மந்திரிமாருடன் மகாநாடு நடத்தினர். இக்கூட்டங்கள் ஸேர். பரனின் சுகவீனங்காரணமாக கொழும்பு லூனியன் பிளேஸிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் நடைபெற்றன.

ஒலி இயலும் தமிழும்

திரு. K. அப்பாத்துரை அவர்கள், M. A.

ஒவ்வொரு மொழிக்கும் வரிவடிவு ஒலிவடிவு என இரு வடிவங்கள் உள்ளன. இவற்றுள் ஒலி வடிவே மொழியின் உண்மையான வடிவம் என்று மொழியியலார் கூறுவர்கள். இவ் ஒலி வடிவத்தையே நாம் பேச்சு என்கிறோம்.

ஒவ்வொருமொழியிலும் பல்வகை ஒலிகள் இருக்கின்றன. இவற்றை நாம் எழுத்துக்களால் குறிக்கிறோம். முதலமுதலாக இவற்றின் வரிவடிவத்தையே நாம் எழுத்து என்று கூறியிருக்கவேண்டும். இப்போது இச் சொல் ஒலிவடிவம், வரிவடிவம் இரண்டையுமே குறிக்க வழங்குகிறது.

மொழியின் ஒவ்வோர் எழுத்தும் ஓர் ஒலியைத்தான் குறிக்கவேண்டுமென்றோ ஒரே ஒலியைத்தான் குறிக்கவேண்டுமென்றோ கட்டாயம் இல்லை. ஓர் எழுத்து ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளை ஒருங்கே குறிப்பதும் உண்டு. ஓர் எழுத்து இரண்டிடங்களில் இரண்டு வேறு வேறு ஒலிகளைக்குறிப்பதும் உண்டு.

தமிழிலுள்ள உயிர் மெய் எழுத்துக்கள் உயிரும் மெய்யும் சேர்ந்த ஒட்டெழுத்துக்களே. எனவே, அவை ஒவ்வொன்றும் உயிர் ஒன்றையும் மெய் ஒன்றையும் சேரக் குறிக்கின்றன. கிரேக்க மொழியில் உயிர்மெய் போன்ற கலப்பில்லை. மெய் எழுத்துக்களும் உயிர் எழுத்துக்களுமே உள்ளன. இதில்கூட ப்ஸை என ஓர் எழுத்து ப் என்ற ஒலியையும் ஸ் என்ற ஒலியையும் ஒருங்கே குறிக்கின்றன.

இனி ஒரே எழுத்து இருவேறிடங்களில் இருவேறு ஒலிகளைக்குறிப்பதற்குத் தமிழ் வல்லின றகரத்தை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். குற்றம் என இரட்டித்த இடத்தும் குறவர் என ஒன்றின இடத்தும் இதன் ஒலிப்பு முற்றிலும் மாறுபடுவது காண்க. தமிழில் இத்தகைய நிலை அருகியே காணப்படுகிறது. ஆங்கிலத்தில் இது பெருங் குழப்பத்தை விளைவிக்கும் ஒரு வழக்காய் இருக்கிறது. ஸி என்ற ஒரே எழுத்து Cat என்ற இடத்து க் என்ற ஒலியையும் (Century என்ற இடத்து) ஸ் என்ற ஒலியையும் குறிப்பது இதற்கோர் பொதுப்படையான எடுத்துக்காட்டு. யூ என்ற எழுத்து (but என்பதில்) அ என்ற ஒலியும் (put என்பதில்) உ என்ற ஒலியும் உடையதா யிருப்பதைக் கண்டு நகையாடாதார் இல்லை.

இனி ஓர் ஒலியைக் குறிப்பிடவும் ஓர் எழுத்துத்தான் அல்லது ஒரே எழுத்துத்தான் அமையும் என்பதில்லை. அதேமாதிரி ஓர் ஒலியை ஒரே எழுத்தாலேதான் குறிப்பிட வேண்டு மென்பதும் இல்லை.

இவற்றுக்குத் தமிழில் எடுத்துக் காட்டுக் கூறுதல் மிக அருமை. அளபெடை ஒலிகள் அல்லது இரண்டு மாத்திரைக்கு மேல்இடையிலும் பண்டமாற்றிலும் செய்யுளிலும் நீளும் நெடில்களை நெடில்குறில் இரண்டும் சேர்த்து ஆஅ, ஊஉ என்று குறிப்பதை ஓர் ஒலிக்கு ஈரெழுத்துக்கள் வருவதற்கான ஒருவாறான எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஓர் ஒலியை இரண்டிடத்தில் இருவேறு எழுத்துக்கள் காட்டுவனத ஒருவாறு ன என்ற ஒலிக்கு ந, ன என்ற இரண்டெழுத்துக்கள் இருப்பது மூலம் குறிக்கலாம். (ஆனால இது ஒருவாறு தான் பொருந்தும். ஏனெனில், இன்றைய ஒலிப்பு இரண்டெழுத்துக்களுக்கும் ஒன்றாயினும் தொடக்கத்தில் இரண்டும் வேறு வேறான ஒலிகளாம்.)

ஆங்கிலத்தில் ஷ் என்னும் ஒலியை எஸ்எச் (sh) என்ற இரண்டெழுத்துக்கள் சேர்ந்து குறிப்பதும் ஜ் என்ற ஒலியை (judge) என்ற ஒரே சொல்லில் ஜே, ஜீ (j, g) என்ற இருவேறு எழுத்துக்கள் குறிப்பதும் காண்க.

எனவே எழுத்துக்கள் பொதுப்பட ஒலிகளின் குறிகள் ஆனபோதிலும் அவ் ஒலிகளை எப்பொழுதும் தெளிவாகவும் சரியாகவும் குறிக்கவில்லை என்பது புலப்படுகின்றது. ஒவ்வோர் எழுத்திற்கும் ஒரே ஒலியும் ஒவ்வோர் ஒலிக்கும் ஒரே எழுத்தும் இருப்பதே மொழியியலார் கருத்துப்படி உயர் முறையாகும். மொழியின் அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்கள் இத்தகைய அறிவியல் நிலையில் இல்லாதபோது அறிவியல் ஆராய்ச்சிக்கு ஒத்ததோர் ஒலி எழுத்து முறையை வகுத்துக் கொள்ளுதல் மொழியியலாருக்கு இன்றியமையாததாகும்.

உண்மையில் உலகிலுள்ள எந்த மொழியின் அரிச்சுவடியும் இன்றைய ஒலியில் முறைக்கொத்த நிறைவு உடையதாயிருக்க முடியாது. ஏனெனில் அவைகள் ஏற்பட்ட காலத்தில் மக்களுக்கு இன்றைய ஒலியியல் அறிவு ஏற்படவில்லை. ஆயினும் ஓரளவில் இந்திய இலக்கண அறிஞர்கள் ஒலியாராய்ச்சியும் ஒலிப்பிறப் பாராய்ச்சியும் செய்ததன்பயனாக இந்தியமொழிகள் அனைத்திலும் உள்ள அரிச்சுவடி பிறநாட்டரிச்சுவடிகளைவிட ஒலியியல் முறைக்கு அணுக்கமுடையதாயிருக்கின்றது.

தென்மொழி, வடமொழிகளிலும், பிற ஆரிய திராவிட மொழிகளிலும் அகர முதல் உயிர் எழுத்துக்கள் முதலிலும் ககர முதல மெய்எழுத்துக்கள் அதன் பின்னும் கலவை எழுத்துக்களாகிய உயிர்மெய்களும் கூட்டெழுத்துக்களும் இறுதியிலும் தரப்படுவது காண்க. மெய்களும் கூடப் பிறப்பை ஒட்டி நாவின்புறத்துத் தோன்றும் ககர முதலாக இதழில் தோன்றும் பகரமீறாக அமைந்ததும், வன்மைக்குப் பின் மென்மை வரிசைப் படியின் வந்ததும் பாதியளவு உயிர்கள்போல நிறந்த ஒலிகளாகிய இடை எழுத்துக்கள் இறுதியில வந்ததும் உற்று நோக்கத்தக்கவை.

எழுத்தொழுங்கில் மட்டுமன்றி எழுத்து, ஒலி இவற்றின் உறவிலும் இந்த முன்னேற்றம் இந்தியமொழிகளில் காணப்படுகிறது. பெரும்பாலும் (முற்றிலும் அல்ல) இவற்றில் ஓர் எழுத்தே ஓர் ஒலியைக் குறிக்கிறது என்றும் ஓர் ஒலியை ஓர் எழுத்தே குறிக்கிறது என்றும் சொல்லலாம்.

இந்திய மொழிகள் அனைத்திற்கும் பொதுவான இவ் உயர்வொழுங்கு முறையும் ஒலியியல் முறையும் ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் போன்ற தற்கால ஐரோப்பிய மொழிகளிலாயினும், இலத்தின் கிரேக்கம் போன்ற பழமையான ஐரோப்பிய மொழிகளிலாயினும், அல்லது அரபு, பாரஸீகம், எபிரேயம், சீனம் இந்தியாவில் முகம்மதியர் வகுத்துக் கொண்ட உர்து முதலிய ஆசிய மொழிகளிலாயினும் இல்லை என்பது தேற்றம். இவற்றுள் உயிர்களும் மெய்யும் கூட வேறு பிரிக்கப்படாது ஒரே அவியல் மாதிரிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் B, P என்பன ஒரே ஒலியின் வன்மையும் மென்மையும் ஆம். இவற்றுள் முதலாவது அரிச்சுவடியில் இரண்டாவது எழுத்தாகவும் பின்னது 16 வது எழுத்தாகவும் இருப்பது காண்க. உர்துவிலும் இதே குழப்பம் உண்டு. இவ்வகையில இந்திய மொழிகளின் மேம்பாடு இந்தியருக்கு இறும்பூது தருவதொன்றேயாகும்.

ஆனால் முன்னைய இலக்கண நூலார் இயற்கை ஒலியையும் ஒலிப்பிறப்பையும் ஆராய்ந்தே எழுத்து முறையும் இலக்கணமும் வகுத்தாராயினும், பின்வந்த இலக்கண நூலார் தம் காலத்தில் ஏற்பட்ட ஒலி மாறுதல்களைக் குறிக்க

தொடர்ச்சி 4 ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழக தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஸு
வைகாசிீ ௧௬ உ வியாழக்கிழமை

யுத்த விவகாரம்

ஆகாயயுத்தம் கடல்யுத்தம் தரையுத்தம் என்னுமிவைகள் இப்பொழுதுதான் மிகவும் கோரமாக நடைபெறுகின்றனவெனலாம். கிரீற்றீவில் மேலும் மேலும் ஜர்மனியர் சைநியங்களையும் யுத்த உபகரணங்களையும் ஆகாய மார்க்கமாகக் கொண்டுபோய் இறக்கிக் கடுஞ்சமர்புரிகின்றார்களெனப் பிந்திய சமாசாரத்தால் அறியக்கிடக்கின்றது. முந்தி இறங்கியதுபோல் இப்பொழுது ஜர்மனிய சைநியம் "பறச்சூற்" மூலம் இறங்குவதை விட்டு அதற்கெனவுள்ள ஆகாய விமானங்கள் வாயிலாக வந்து இறங்குகின்றன வென்றும், ஜர்மனியர் தம் சைநியத்திற்கு இத்யுத்தத்தில் எவ்வளவு சேதம் நேர்ந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது கோரமான யுத்தஞ் செய்கின்றார்களென்றுஞ் சொல்லப்படுகின்றது. கிரீற்றில் மலிமி என்ற இடத்திற்றானும் இப்பொழுது கடுஞ்சமர் நிகழ்கின்றது.

இனிக் கடற்சண்டை விஷயமாகச் சொல்லுகில், ஜர்மனிய கடற்படையைப் பிருத்தானிய கடற்படை தாக்கிய போது, ஜர்மனியருக்குரிய கடற்படை, உலகத்திற் பாரிய யுத்தக் கப்பலெனப் பாராட்டப்படும் H.M.S.கூட் என்னும் பிருத்தானியகப்பலைத் தாக்கி உடைத்துக் கடலுள்மூழ்கச் செய்துவிட்டது. ஆனால் எங்கள் பிருத்தானிய கடற்படை பழிக்குப் பழி வாங்கிவிட்டது. ஜர்மனியருக்குரிய பெரிய யுத்தக்கப்பலாகிய பிஸ்மார்க்கை பிருத்தானிய கடற்படை துரந்து சென்று குண்டுப் பிரயோகஞ் செய்து தாக்கிக் கடலுள் அமிழ்ந்தச் செய்துவிட்டது. இது எங்களெல்லோர்க்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய நிகழ்ச்சியெனலாம். இன்னமும் கடற்படை யுத்தம் நடைபெறுகின்றது.

அபிஸீனியாவில் நடைபெறும் தரைப்படை யுத்தத்தில் எங்கள் பிருத்தானியரே கிரமமாகச் செயமடைந்து வருகின்றனர். இத்தலிய சைநியம் ஒவ்வொரு தானமாகப் பறிகொடுத்துப் பின்வாங்குகின்றது.

அயர்லாந்தில் டீவெலறாவும் அவர் கூட்டத்தினரும் இன்னமும் பிருத்தானியருக்கு மாறுகவே நிற்கின்றார்களெனலாம். அங்கே பிருத்தானியருக்குரிய அல்ஸ்ரர் மாகாணத்தில் ஆணகளெல்லோரையும் யுத்த வீரர்களாகப் பயிற்றிச் சைநியந் திரட்டுவதற்குப் பிருத்தானிய அதிகாரிகள் முயன்றபோது அவர்கள் அதற்கு உடன்படாது மறுத்து மாறுபட்டு நிற்கின்றார்கள்.

இனி, ஜப்பானியர் தமக்கும் அமரிக்கர் பிருத்தானியர் என்னும் இரு சாதியார்க்குமிடையே பெரிய யுத்தம் விரைவில் நேருமென்ற நோக்கத்தினால் யுத்தத்திற்காகிய முயற்சிகளையும் அரண்களையும் ஆயத்தங்களையும் துரிதமாகச் செய்கின்றார்களென இப்பொழுது அறியலானோம். "பசிபிக் சமுத்திரத்தில் விரைவாகப் பெரும் யுத்தம் நடக்கப்போகின்றது. ஆனதனால் நாங்கள் ஆயத்தமாக இருக்கவேண்டு" மென்று ஜப்பானிய கடற்படை மந்திரி தம் சனங்கட்குக் கூறியுள்ளாராம். ஜப்பானியருக்குரிய200யுத்தக்கப்பல்கள் சீனத்தின் கடற்கரைகளிற் காவலாகச் சஞ்சரிக்கின்றனவென்றும், 300யுத்தக்கப்பல்கள் மேற்குப்பசிபிக் சமுத்திரத்தில் யுத்தத்திற்கு ஆயத்தமாக நிற்கின்றனவென்றும் ஜப்பானியர்மூலமாக அறியக்கிடக்கின்றன. பிருத்தானியாவிற்குப் பொருள் ஏற்றிச் செல்லும் கப்பல்களைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கர் துணைக்கப்பல்கள் அனுப்புகிறார்களென்றும் அவர்கள் அப்படிச் செய்யும்போது ஜப்பானியர் யுத்தமின்றிச் சுமமாவிருத்தல் முடியாதென்றும் ஜப்பானிய யுத்தமந்திரி கூறுகின்றாராம்.

தேசாதிபதி நாளை யாழ்ப்பாணம் வருகிறார்

மே. த. தேசாதிபதி நாளைவெள்ளிக்கிழமை இரவு மெயில்புகைரதவண்டியில் யாழ்ப்பாணத்துக்குப் பிரயாணமாவார்.

அவர்சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு 'யாழ்ப்பாணத்தின்பதில்'என்னும்களியாட்டத்தைத் திறந்து வைப்பார்.

அவர் சனிக்கிழமை இரவு கொழும்புக்குத் திரும்புவார். தேசாதிபதியோடு அவரது அந்தரங்கக் காரியதரிசி திரு. எச். ஏ. வி. டர்ப்லாம் செல்லுவார்.

மழையும் புயலும் விளைத்த சேதம்

கரையோரப் புகையிரதத்துக்குக் காலதாமதம்

வேருவிளையில் மின்சார இணைப்பு முறிந்தது

வேருவிளை மே 27

இன்று அதிகாலை மின்சார விளக்குகள் அணைந்து போனதினால் இந்நகரில் எங்கும் இருளாகி விட்டது. மின்சார இணைப்புக்கம்பிகள் பலத்த புயலினாற் சேதமடைந்ததே இதற்குக் காரணம்.

ஞாயிற்றுக்கிழமை இரவு இதேபோல் அளுத்கமையில் மின்சார இணைப்புப் பழுதாகி இருள் சூழ்ந்துவிட்டது.

வேருவிளைக்கும் பெய்யகலைக்கும் மத்தியில் தந்தி டெலிபோன் இணைப்புகளும் புகைரதக்கைகாட்டி மர இணைப்புகளும் பழுதாகி விட்டதினால், இன்று காலையிலும் கரையோரப் புகைரதப் போக்குவரத்துச் சிறிது நேரம் தடைப்பட்டது.

புகைரதம் தாமதித்து வந்தது

ஹட்டன் மே 27

இன்று காலை 11-40 மணிக்கு ஹட்டனிலிருந்து புறப்பட்ட புகைரதம் வழியில் கோட்டகலைக்கருகில் அரைமணி நேரம் தாமதித்து நின்று விட்டது.

புகைரதப்பாதையின் குறுக்காக ஒரு மரம் முறிந்து விழுந்திருந்ததினால், தந்திக் கம்பிகள் முறிந்து போய்விட்டன.

கிராமக்கமிட்டித் தேர்தல் பின்போடப்பட்டது

களுத்துறை மே 27

கமகொடைப் பாடசாலையில் நடக்கவிருந்த கிராமச்சங்கத் தேர்தல்கள் வெள்ளப்பெருக்கின் காரணமாகப் பின்போடப்பட்டு விட்டன.

பெலதோட்டை பஞ்சியின் முதலிய இடங்களில் வீடுகள் பல வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றன. காகொடையில் விவாகப் பதிவு ஸ்தலத்தில் வெள்ளம் பிரவேசித்துவிட்டது.

களுத்துறை சுகாதார ஸ்தலமும் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றது.

வெள்ளத்தில் மூழ்கி வாலிபர் மரணம்

எட்மண்ட் என்னும் வாலிபர் இன்று மாலை நகொடை வெள்ளப் பிரவாகத்தில் அமிழ்ந்தி மரணமானார். வெள்ளப் பெருக்கில் ஸ்நானம் செய்து கொண்டிருந்த இவர் பிரவாகத்தால் இழுத்துச் செல்லப்பட்டார்.

களுத்துறைச் சாரணப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் நீந்திச்சென்று எட்மண்டை வெளியே இழுத்து வந்தார். எட்மண்ட் விரைவாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் பட்ட போதிலும் அவருக்கு மரணமேற்பட்டது.

கண்டியில் இரு பரிதாப மரணங்கள்

கண்டி மே 27

கனேருவவையைச் சேர்ந்த பாலய்யா என்னும் ஒரு தொழிலாளியின் மீது பேராதனைத் தோட்டத்தில் ஒரு மரம் சாய்ந்து விட்டதால் அவர் பரிதாப மரணமடைந்தார். அங்கு மழைக்கு ஒதுங்கி நின்ற மற்றொருவருக்குப் பலத்த காயமேற்பட்டது.

கட்டுகஸ் தோட்டையில் ஒரு இளம்பெண் ஞாயிற்றுக்கிழமை ஆற்றுப்பிரவாகத்தில் மூழ்கிப் பரிதாப மரணமடைந்தாள்.

உலகம்பலவிதக்கதை

(முற்றொடர்)

அவனுக்குச் சிறைத்தண்டனை

உயர்தர நீதித்தலத்தில் விசாரணை செய்து பாலசுந்தரனுக்கும் அவன் கூட்டாளிமாருக்கும் வருடக்கணக்கிற் கடும் வேலையத்தோடு கூடிய சிறைத்தண்டனை விதிக்கப்படலாயிற்று. பாலசுந்தரன் சிறைச்சாலை புக்கமை முதலியாருக்கும் அவர் குடும்பத்தினர்க்கும் துயரத்தை விளைத்தது. பொலிசார் தொடர்ந்த வழக்காதலின் அவன் விஷயமாக முதலியார் பின்னர் எதுவும் செய்ய முடியாதவரானார்; அதனையிட்டுப் பச்சாத்தாபப்பட்டார். முதலியார் குடும்பத்தில் மங்களத்தம்மாளை விட மற்றையோர் பாலசுந்தரன் சிறைச்சாலை புகுந்ததைப்பற்றிக் கவலைப்பட்டனர்; ஆயினும் அந்தநாள் தொடக்கம் பாலசுந்தரன் குடும்பத்திற்கும் முதலியார் குடும்பத்திற்கும் பெரும் பகை உண்டாயிற்று.

"எந்தப் புற்றில் எந்தப் பாம்போ"

சோமசுந்தரன் அடுத்தநாள் முதலியார் வீட்டிற்குப்போனான்; அந்நேரத்தில் அங்கே கந்தசாமி முதலியார் இல்லையாக, மங்களத்தம்மாளே மருகனை உபசரித்தாள். சோமசுந்தரன் கவலையோடிருப்பக்கண்ட மங்களம் "என்னவிசேஷம்? தம்பி" என்று பரிவுடன் கேட்க விசேஷம் ஒன்றுமில்லை யென்று அவன் சொல்லிப் பெருமூச்சுவிட்டான். பின்னர் "மாமா மீண்டு வீட்டிற்கு வர நேரஞ்செல்லுமோ" என்று மங்களத்தைக் கேட்க அவள் "எப்பொழுது வருவாரோ தெரியவில்லை; இன்னமும் போசனம் செய்யவில்லை; ஆனதால் அதிக தாமதமில்லாமற் சீக்கிரத்தில் வந்து விடுவார்; நீர் என் அவசரப்படுகிறீர்; இது என்ன அந்நியர் வீடா, உங்கள் சொந்த வீடுதானே, தாகமாயிருந்தால் ஏதும் குடிக்கலாம், தருவிக்கவா" என்றுகேட்க, அவன் "எனக்கு இப்பொழுது ஒன்றும் வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் பின்னருங் கவலையோடு இருந்தான்; "நீர் வந்த கருமத்தை உங்கள் மாமா அல்லாமல் நாங்கள் அறியவொண்ணாதா" என்று மங்களம் மருமகனை மெல்லக் கேட்டாள். "நீங்கள் அறிவதனாற் பாதகமில்லை. மாமனாரும் வந்தபின் சொல்லலாமென்று நினைத்தேன்; உங்களைப் புறக்கணித்து நான் ஏதுஞ் செய்ய நினைக்கவில்லை; வேறொன்றுமில்லை; விவாகத்திற்கு நாள் நியமித்து விட்டுப் பின்பு தவணையிட்ட காரணமென்ன வென்று மாமாவைக் கேட்கும்படிதான் இந்த நேரத்தில் இங்கே வந்தேன்" என்றான் சோமசுந்தரன். "பொருளிழவு, தானம், மானம், அவமானம், வயசு, கிருச்சித்திரம் என்னுமிவைகளைப் பிறருக்கு வெளியிட வொண்ணாதென்று சொல்லுவார்கள்; ஆனதால் நான் எங்கள் வீட்டு இரகசியங்களை உங்களுக்கு வெளியிடுவது முறையல்ல; அதனாற் பெரும் பழியும் வந்து நேரக்கூடும்; நீர் உமது மாமனார் வாயிலாக அறிந்து கொள்வதே முறை" என்று சிறிது அச்சத்தோடு சொன்னாள் மங்களம். "என்னை நீங்கள் உங்கள் குடும்பத்திற் சேராத அந்நியனாகவா வைத்திருக்கிறீர்கள்; இப்படியானால் நான் இங்கே வந்ததுந் தவறு, உங்களைக் கேட்டதுந் தவறு, மாமா இல்லாத இடத்தில் இங்கே இருப்பதும் பெரும் பிழை" என்று சொல்லிவிட்டுப் போவதற்கெழுந்தான். போகப் புறப்பட்டவனை மங்களம் தடுத்து "தம்பி, நீர் கோபிக்கவேண்டாம்; உங்கள் மாமனார் மூலமாகக் கேட்டறிவதே நல்லதென எண்ணினேன்; உம்மை நான் ஒருபோதும் புறக்கணிக்கப் போவதில்லை; நீர் விரும்பினால் நான் உண்மையான காரணத்தைச் சொல்லிவிடுகிறேன்; ஆனால் என் வாயினாலே வெளிவந்ததென்று வேறொருவரும் அறியாமலிருப்பது நல்லது. வேறொன்றுமல்ல, எங்கள் மூத்த மகன் தனக்கு விவாகமே வேண்டாமென்று பிடிவாதமாக நிற்கிறான்; நாங்கள் எவ்வளவு சொல்லியும் அவன் கேட்கவில்லை; அதனால் உங்கள் மாமாவுக்கு அதிக கவலையுண்டு. ஆனபடியினாற்றான் உங்கள் விவாகந் தவணையிடப்பட்டது" என்றாள். கேட்ட சோமசுந்தரன் சிறிது நேரம் யோசித்துவிட்டு "உங்கள் மூத்த மகனுக்கு ஏன் விவாகஞ் செய்ய விருப்பமில்லையோ, அல்லது, பொருத்தமில்லாத இடத்தில் புக விருப்பமில்லையோ" என்று கேட்டான். "இல்லை, அவன் தனக்கு விவாகமே வேண்டாம் என்று பிடிவாதஞ் செய்கிறான்; இனி, எந்தப் புற்றில் எத்தப் பாம்பிருக்கிறதோ, அதனை ஆருக்குத் தெரியும்" என்று சொல்லி முடித்தாள் மங்களம். "தன் தங்கைக்கு நேர்ந்த கவலையை யிட்டுத் தமக்கை இப்படிப் பிடிவாதஞ் செய்யக் கூடுமோ" என்று பின்னரும் சோமசுந்தரன் கேட்க, "தங்கைக்கு நேர்ந்த கவலையென்ன? பாலசுந்தரனில்லாவிட்டால் என் பிள்ளையை இன்னொருவன் தேடி வரமாட்டானோ? என் பிள்ளைக்கு ஒரு குறையுமில்லை; அவனையிட்டு ஒருவரும் கவலைப்பட வேண்டியதுமில்லை" என்று பதில் சொன்னாள் மாமி.

சர்க்கரைப் பந்தரில் தேன்மாரிபெய்தாற்போல்

இப்படி மங்களஞ்சொல்ல, சோமசுந்தரன் சிறிது யோசித்துவிட்டு "மூத்தமகன்விவாகஞ்செய்ய உடன்படாவிட்டால் உங்கள் இளைய மகளை எனக்குக் கல்யாணஞ்செய்து தர உங்களெல்லோருக்குஞ் சம்மதந்தானே" என்று தன் மாமியைக் கேட்டான்; "அப்படிச் சந்திக்குமானால் அது எங்கள் பெரும்பாக்கிய மல்லவோ, அல்லாமலும் அந்தச் சம்பந்தம் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தது போலல்லவா இருக்கும்; இது எனக்குச்சம்மதம். எங்கள் பிள்ளைகள் இரண்டு பேருக்கும் விருப்பமாகவிருக்கும்; ஆனால் உங்கள் மாமாவின் விருப்பம் என்னவோ நான் அறியேன்" என்று மங்களம் மகிழ்ச்சியுடன் சொன்னாள். "உங்கள் மூத்த மகனுக்கு இது விருப்பமாக இருக்குமென்று சொல்லுகிறீர்கள்" என்று சோமசுந்தரன் கேட்க, மங்களம் "ஓம்," என்று சொன்னாள். உடனே சோமசுந்தரன் ஒரு வெண்ணிறக் காகிதமும் காகித உறையும் கொண்டுவரச் சொல்லி, அங்ஙனம் கொண்டு வந்து கொடுக்கத் தன் ஊற்றுப் பேனையினால் மாமனாருக்கு ஒரு கடிதம் எழுதி உறையுள் வைத்து ஒட்டி அவர் வந்தவுடன் கொடுக்கும்படி சொல்லி மேசையில வைத்து விட்டு மாமியாரிடம் விடைபெற்றுக் கொண்டு தன் வீட்டிற்கு மீண்டான். அவன் போனபின் சற்று நேரஞ் செல்ல முதலியார் தம் வீட்டில் வந்து சேர்ந்தார். அவர் ஸ்நானஞ் செய்து போசனமும் முடித்துவிட்டு ஆறுதலாக இருக்குஞ் சமயம் பார்த்து மங்களம் மருமகன் வந்த வரலாற்றைச் சொல்லி அவன் எழுதி வைத்து விட்டுப் போன கடிதத்தையும் முதலியாரிடங் கொடுத்தாள்.

கல்யாண முயற்சி

முதலியார் கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படித்தார்; இரண்டாம் முறையும் படித்தார்; நீடித்த நேரம் யோசித்தார். இதற்கிடையில் மனைவி "என்ன எழுதியிருக்கிறார்? ஏன் யோசிக்கிறீர்கள்" என்று ஒன்றும் அறியாள் போல் இதமாக வினவினாள். முதலியார் அதில் எழுதப்பட்ட விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னார். தனக்கு இன்னுஞ் சில மாசஞ் செல்ல உத்தியோகக் கடமை விஷயமாக ஊர் மாறவேண்டி ஏற்படுமென்றும இப்பொழுதே விவாக முயற்சி செய்து விட்டுப் பின் தவணையிடப் பட்டதைப் பற்றி வெகுசீலை பலவிதமாகக் கதைக்கிறார்களென்றும் இப்பொழுது விவாகம் நிறைவேறு தொழியின் பின் வருடக் கணக்கிற் செல்லுமென்றும், பின்னர்த் தன்னைக் குறைசொல்ல வொண்ணாதென்றுங் கருத்துப்பட அக்கடிதத்தில் எழுதியிருந்தது. முதலியாருக்குச் செய்வதின்னதென்பது புலப்படவில்லை; அவர் எவ்வளவிற்கு யோசித்தாரோ அவ்வளவிற்கு அவருக்குக் கவலை அதிகப்பட்டது. "மங்களம் உனக்குத்தான் உண்மை முழுவதும் தெரியுமே; இதற்கு என்னசெய்யலாம்" என்று கவலையுடன் தன் மனைவியைக் கேட்க, அவள் "எனக்கு ஒன்றும் புலப்படவில்லை; அவருக்கு வேறு எங்கோ "பேச்சுக்கால்" இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் இவ்வளவு நெருக்கி நிற்கமாட்டார்; அமிர்தத்தை இன்னொருமுறை கேட்டுப் பார்ப்பது நல்லது" என்று அகத்திலே மகிழ்ச்சிபொங்க முகத்திலே கவலை அதிகப்படச் சொன்னாள். "இனிக் கேட்பதென்ன? நான் கேட்க வேண்டிய அளவிற்குக் கேட்டுவிட்டேன்; சொல்லக்கூடியவையாயிற் சொல்லிவிட்டேன்; என் பிள்ளை பிடிவாதஞ் செய்கிறான்; தன் தங்கைக்கு விவாகம் நடந்தாற் போதுமென்கிறான்; தனக்கு விவாகமே வேண்டாமென்கிறான். இன்னும் நான் அவனை நெருக்கினால் அவன் தன் உயிருக்கும் ஏதும் தீமைதேடி விடுவானென்று பயப்படவேண்டியிருக்கிறது; ஆனதால் அவன் விஷயத்தில் இனிமேல் நான் தலையிடமாட்டேன்; என் பிள்ளைக்கு ஒரு பொல்லாங்கு நேருமேயானால் பின் நான் மனஞ்சகிக்க மாட்டேன்; எல்லாம் விதியின் படியே நடக்கும்; இப்பொழுது நான் இரண்டு குமர்ப் பிள்ளைகளை வைத்துக் கொண்டு எங்கள் அரிய மருமகனை வெளியே போக விடுவது புத்தியாகாது; ஆனதாற் சுந்தரத்தைச் சோமசுந்தரத்திற்குக் கல்யாணஞ் செய்து வைக்கலாமென யோசிக்கிறேன்; உன் எண்ணமென்ன? சொல்லு" என்று சிந்தையுடன் கேட்டார். "பெண்பேதை எனக்கென்ன தெரியும்; ஆனால் ஒன்றையிட்டு மாத்திரம் யோசிக்கிறேன்; தாயில்லாப் பிள்ளை மூத்த பிள்ளையிருக்க, நாங்கள் இரண்டுபேரும் மனமொத்து எங்கள் பிள்ளைக்குக் கல்யாணம் முடித்து வைத்தோம் என்று உலகம் எங்களை அபவாதஞ் சொல்லும்" என்றாள் மங்களம்; "உலகம் சொல்லுவதற்கு நாம் என்னசெய்ய முடியும்; அந்த இறைவனொருவனுக்கே நாங்கள் கணக்குக் கொடுக்க வேண்டியது; உண்மை காலகதியில் வெளிவருந்தானே; ஆனதால் அதைப்பற்றிப் பாதகமில்லை; ஆனால் இந்த விஷயத்தை எங்கள் பிள்ளைகள் இருவருள் ஒருவருக்கேனும் வெளியிடாதே; மேலும் விவாகத்தை மிகவும் இரகசியமாகவே நடத்த வேண்டும்; பாலசுந்தரன் மறியலிலிருக்க, எங்கள் மக்கள் மனம்மாறியிருக்க நாம் இடாம்பீகமாகக் கல்யாணம் நடத்த முடியாது; நான் ஆகவேண்டிய முயற்சிகள் செய்கிறேன்; சுந்தரத்தை விவாகஞ் செய்து கொள்ள எங்கள் மருமகனைச் சம்மதிக்கச் செய்வது உன் கடமை" என்று முதலியார் சொல்ல, "எங்கள் மருமகன் நூறுமுறையும் சம்மதிப்பார்; அதைப் பற்றி நீங்கள் கொஞ்சமேனுங் கவலைப்படவேண்டாம்" என்று மங்களஞ் சொன்னாள். முதலியார அன்றுதொடக்கமாகவிவாகத்திற்காகிய முயற்சிகளைச்செய்தார்; சுபமுகூர்த்தமும் நியமித்தாய்விட்டது.

(வரும்)

பெரிய ஜெர்மன் கப்பல் மூழ்கியது

பிஸ்மார்க் சண்டையிற் சலத்துக்கு இரையாயிற்று

லண்டன், மே, 27-

பிஸ்மார்க் என்னும் 35,000 தோன் கொண்ட பெரிய ஜெர்மன் சண்டைக்கப்பல் கடலில் அமிழ்த்தப்பட்டதாக உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

ஜெர்மன் கடற்படைக்குப் பெருமையளிப்பதென்று பிரமாதமாகச் சொல்லப்பட்டு வந்த 'பிஸ்மார்க்' என்னுஞ் சத்துருவின் சண்டைக்கப்பல் பிருத்தானிய கடற்படையைச் சேர்ந்த ஆகாயப்படையினால் டோர்ப்பிடோப் பிரயோகஞ் செய்து தாக்கப்பட்டதாகவும் சேதமடைந்தசத்துருக்கப்பலைபிருத்தானியயுத்தக்கப்பல்கள் விடாமல வேகமாகத் துரத்திக் கொண்டிருப்பதாகவும் நேற்றிரவு வெளியான விசேஷகடற்படைககாரியாலய அறிக்கையொன்று கூறியது.

முஸ்லிம் ஸ்திரீ கைதி

பாட்டுப் பாடியது குற்றமாம்

லாகூர், மே 24-

சர்கோட்டாவிற் நடந்த பொதுக் கூட்டமொன்றில் ஆக்ஷேபகரமான பாட்டுப் பாடியதற்காக பேகம் துலாம் பதிமா என்ற காங்கிரஸ் ஊழியரான முஸ்லீம் ஸ்திரீ கைதியானார்.

சுபாஷிடமிருந்து பிரசுரங்கள்

அரசாங்கத்தார் தடுத்துவிட்டனர்

பாட்னு மே 22—

ஐரோப்பாவில் எங்கோ ஓர் இடத்திலிருந்து சுபாஷ்பாபு கையொப்பத்துடன் வந்திருப்பதாகச் சொல்லப்படும் துண்டுப் பிரசுரம் ஒன்றைப் பீஹார் அரசாங்கத்தார் தடுத்துவிட்டார்கள். அதில் ஆக்ஷேபகரமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றனவாம்.

கொச்சி திவான் பதவியிலிருந்து விலகுவார்

எர்ணுகுளம், மே 26

கொச்சி திவான் ஸர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் ஜூன் 30ந் தேதிமுதல் தமது பதவியிலிருந்து விலகிக்கொள்ள அநுமதிக்குமாறு மஹாராஜாவைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஜூன் 30 முதல் அவர் நான்குமாத விடுதலையிற் செல்லுவார். அதன் முடிவில் அவர் தமது பதவியிலிருந்து விலகிக்கொள்ளுவார்.

வியாச்சியங்கள்

(நமது நிருபர்)

சட்டவிரோதமாகக் கூடித் தடைசெய்த வழக்கு

இருவர் விசாரணை செய்யப்பட்டனர்

ஆனைக்கோட்டையில் வசிக்கும் (1) ஐயாத்துரை பெண் சின்னத்தங்கம் (2) மாணிக்கம்-துரையப்பா (3) மாணிக்கம் மார்க்கண்டு (4) விஞரி-கணபதி (5) கணபதி பெண் அன்னப்பிள்ளை (6) மாணிக்கம்-கந்தையா (7) மாணிக்கம்-சிவக்கொழுந்து (8) மாதன்-சின்னப்பன் (9) கணபதி-மயிலு (10) முருகன்-பிரகாசம் (11) நாகமுத்து-நாகலிங்கம் (12) நாகமுத்து-கந்தையா ஆகியவர்கள் 1941ம் ஆண்டு மே மாதம் 9ந் திகதி சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி அபாயகரமான ஆயுதங்களோடு ஆனைக்கோட்டைப்பொலிஸ்காரர்கள் 2261 சில்வாவையும் 2022 மீடிலையும் 2362 நடராஜாவையும் 2825 இராஜநாயகத்தையும் கடமைசெய்யவிடாது தடுத்து மாணிக்கம் ஐயாத்துரைக்கு உதவி புரிந்ததையால் ஐயாத்துரை பொலிஸ்காரரின் பாதுகாப்பிலிருந்து தப்பியோடியதாயும் அவர்கட்குகாயம் வருவித்ததாயும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி மிஸ்டர் குவிண்டன் பொனுன்டோ முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

வழக்கின் சாரமாவது

ஆனைக்கோட்டையில் வசிக்கும் சின்னத்தம்பி-செல்லையா தன்னுடைய வலைகள் காணாது போக அவைகளைப்பற்றி விசாரித்தார், விசாரித்தபோது அவ்வூர் மாணிக்கம்-ஐயாத்துரையிடம்இருப்பதாகவறிந்து அங்குசென்றுகேட்டார். ஐயாத்துரை காசு ரூபா2 - 25சதம்தந்தால் வலைகளைத்தருவதாகக் கூறினர். செல்லையா பொலிஸ் நிலையஞ்சென்று இதனை அறிவித்தார். பொலிசார் செல்லையாவிடம் அடையாளம் குறித்தகாசு ரூபா 2-25 சதத்தைக்கொடுத்து வலைகளை ஐயாத்துரையிடம் வாங்கினதும் மூன்று முறை தும்மும்படி கட்டளையிட்டுச் செல்லையாவோடு நாலு பொலிஸ்காரரையும் பாறுவதியென்னும் மேற்றனையும் அனுப்பினர். பாறுவதியை அனுப்பினது ஐயாத்துரை அல்லது மனைவியார் சின்னத்தங்கம் காசைப்பெற்றுக் கொண்டு வலைகளைக் கொடுத்தால் சின்னத்தங்கத்தைப் பிடித்து வருவதற்காகவேயாம். எல்லவரும் அங்குசென்று ஐயாத்துரையின் படலையில் நின்றனர். செல்லையாவும் படலையடியில் நின்று ஐயாத்துரையைக் கூப்பிட்டார். ஐயாத்துரையும் மனைவியாரும் ஒரு மரத்தின் கீழ் இருந்தனர். செல்லையாவை வரும்படி ஐயாத்துரை கூப்பிட்டார். செல்லையாசென்று கதைத்தார். பின்னர்க் காசைக் கொடுத்தார். ஐயாத்துரை காசை மடிக்குள் வைத்துவிட்டு மனைவியாரை வலைகளை எடுத்துவரும்படி கூறினர். வலைகள் கொண்டு வரப்பட்டன. செல்லையா வலைகளை எடுக்கும்போது மூன்றுமுறை தும்மினர். படலையடியில் நின்றவர்களெல்லாம உள்ளே சென்றனர். சில்வா உடனே ஐயாத்துரையைப் பிடித்தார். அவருடைய மடியிலிருந்து காசை எடுத்தார் பின்னர் ஐயாத்துரை ஒரு கத்தியை எடுத்துக்குத்தப் போனர். ஒருமுறை குத்தியகுத்து சில்வாவின் கோட்டிலுள்ள குறிப்புப்புத்தகத்தில் பட்டது. பொலிஸ்காரர் சேர்ந்து ஐயாத்துரையைப் பிடித்தனர். ஐயாத்துரையின் மனைவியார் சத்தமிட்டாள். அங்கு ஒருபெரிய கூட்டம் கூடினது. கூட்டத்தார் பொலிஸ்காரரைத் தாக்கினர். பொலிஸ்காருக்குக் காயங்கள் ஏற்பட்டன. ஐயாத்துரை பொலிஸ் காரரின் பாதுகாப்பிலிருந்து தப்பியோடினர். பின்னர் மற்றையோரும் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

இன்று சார்ஜன்ட்ஜோர்ஜ் என்பவருடையதும் சில்வாவென்பவருடையதும் வாய் முறைப்பாட்டை நீதிபதி பதிவு செய்தபின்னர், மேல் விசாரணையை வருகிற 11ம் திகதிக்குத் தவணையிட்டார்.

லொறி-கார் விபத்து

லொறி டிறைவர் மீது வழக்கு

வீரகத்திப்பிள்ளை அன்ட் கொம்பனியைச் சேர்ந்த Z 494ம் இலக்க லொறி டிறைவர் செல்லமுத்து பற்றிக் டேவிட் சென்ற 1941-ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 28-ந்திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி றேட்டில் தமது லொறியைக் கவலையீனமாகச் செலுத்தியதாற் பாணந்துறை நீதிபதி மிஸ்ரர் J. பிலிப்ஸ் என்பவருக்குரிய X 769-ம் இலக்கக் காரோடு மோதுண்டதன் பலனாக மிஸ்றர் J. பிலிப்ஸ் என்பவருக்குக்கடுங்காயமவருவித்ததாய்க் குற்றஞ்சாட்டி நீதிபதி மிஸ்ரர் குவிண்டன் பொனுண்டோ முன்னிலையில் ஒரு வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இவ்வழக்கில் நீதிபதி சில சாக்ஷிகளின் வாய்முறைப்பாட்டைப் பதிவுசெய்தபின்னர் எதிரியை 250-ரூபாய்ப் பிணையில் விட்டு வழக்கை வருகிற 16-6-41ந் திகதிக்குத் தவணையிட்டார்.

க. கி.

வடமாகாணத்தில் முதலாவதுபாற்சாலை

வைத்திய சுகாதார டைரெக்றரால் திறந்து வைக்கப்பட்டது

மானிப்பாயிற் சுகாதாரக் காட்சி

யாழ்ப்பாணம் மே 25

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பாற்சாலையைச் சுகாதார டைரக்டர் டக்றர். எஸ். எப். செல்லப்பா நேற்று மத்தியானம் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார்.

வடபகுதிக் கூட்டுறவு உதவி ரெஜிஸ்திரார் கூட்டத்திற்கு வர முடியாமற் போய்விட்டதால் அவருக்குப் பதிலாக உயர்தரக் கூட்டுறவு இன்ஸ்பெக்டர் திரு. எப். ஏ. சந்திரசேகரா டக்றர் செல்லப்பாவை வரவேற்றுப் பேசினர்.

பாற் சாலைக் கொம்பெனியைச் சம்பிரதாயப்படி திறந்து வைத்த டக்றர் செல்லப்பா பேசுகையில் யாழ்ப்பாணத்தில சுகாதார ஸ்தாபனமொன்றை அமைத்துக் கொடுக்க அரசாங்கம் முன்வந்தபொழுது அது நிராகரிக்கப்பட்டமை பெரிதும் வருந்ததக்கதென்று குறிப்பிட்டார். ஆனல், சென்ற இரண்டு அல்லது மூன்று வருடங்களாக யாழ்ப்பாணத்தில் சுகாதார அதிகாரிகள் நல்ல வேலைசெய்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மானிப்பாய்ச் சுகாதாரக்காட்சித் திறப்பு வைபவம்

மானிப்பாயிலுள்ள அரசாங்க மருத்துச்சாலைக்கட்டிடத்தில் வைத்திய சுகாதார இலாகாவால் நடத்தப்படும் சுகாதாரக் காட்சியையும் சுகாதார டைரக்டர் டக்றர் எஸ். எப். செல்லப்பா நேற்றுமாலை திறந்து வைத்தார். சுகாதாரக் காட்சித் திறப்புக்கு முன்பு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதி திரு. C. குமாரசுவாமி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

டக்றர் செல்லப்பாவும், திரு. C. குமாரசுவாமியும், ஆலடிச் சந்தியிலிருந்து காட்சிச் சாலைக்கு மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். கூட்டத்தின் முன்னிலையிற் பள்ளிக்கூடச் சிறுவர்கள் சுகாதார சம்பந்தமான சுலோகங்கள் எழுதப்பட்ட மட்டைகளைப் பிடித்துக்கொண்டு அணிவகுத்துச் சென்றனர்.

சுகாதார சங்கத் தலைவர் முகாந்திரம் எஸ். கே. சுவாமிநாதன், காட்சியையும், சிசு சம்ரக்ஷணைப்பகுதி சிகிச்சா ஸ்தாபனத்தையும் திறந்து வைக்கும்படி டக்றர் செல்லப்பாவைக் கேட்டுக் கொண்டார்.

"சுகாதார டைரக்டர் பதவிக்கு முதல் தமிழர்"

திரு. C. குமாரசுவாமி கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில, இரண்டாவது இலங்கையராகவும், ஆனல் முதலாவது தமிழராகவும் சுகாதார டைரக்டர் பதவிக்கு வந்துள்ள டக்றர் செல்லப்பாவை யாழ்ப்பாணத்தவர்கள் கௌரவிக்கத்தான வேண்டுமென்று குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

"அவரைப் பற்றித் தமிழர்களாகிய நாம் பெருமை கொள்ளத்தான் வேண்டும். வகுப்புவாதம் வெறுக்கப்படும் இக்காலத்தில நான் இப்படிச் சொல்வதினால் என்னையும் வகுப்புவாதி யென்று குறைகூறுவார்களோ என்னவோ? அதெனக்குத் தெரியாது. ஆனல் டக்றர் செல்லப்பா தமது திறமையினால மாத்திரமே இப்பதவியை அடைந்துள்ளார் என்பதை நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

பின்னர்ச் சுகாதாரச் சங்கத்தின் சார்பாக டக்றர் செல்லப்பாவுக்கு அலங்காரமாகத் தயார் செய்யப்பட்டிருந்த உபசாரப் பத்திரமொன்று அளிக்கப்பட்டது.

டக்றர் செல்லப்பா காட்சியைத் திறந்து வைக்கையில், யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி டக்றர் எஸ். ஈ. துரைராஜாவைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

இளைஞர் சமூக ஊழியர் சங்க மகாநாடு

ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகள்

தலைவர் சொற்பொழிவு

மிஸ்ரர் சிட்னி டி. சொய்சாவின் சொற்பொழிவு

இளைஞர் சமூக ஊழியச் சங்க மகாநாட்டின் இரண்டாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை யன்று முற்பகலில் சங்கத்தின் காகிதக் கைத்தொழிற்சாலைக்குப் பலர் விஜயஞ்செய்து, அங்கு காகிதம் செய்யும் முறை செய்துகாட்டப்பட்டது. அதன்பின், சவர்க்காரம், மை, அப்புக் கயிற்றுப்பாய், பழரசப் பானிகள், செவு முதலியவை சம்பந்தமான கைத்தொழில் முறைகள் செய்து காட்டப்பட்டன.

பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் மகாநாட்டுக் கூட்டம் ஆரம்பித்தது. அகில இலங்கைக் கிராமப் புனருத்தாரணச் சங்கத்தின் தலைவர் மிஸ்டர். டாசெல் பீரிஸ் B. A. தலைமை வகித்தார்.

அகில-இலங்கைக் கிராமப் புனருத்தாரணச் சங்கத்தின் காரியதரிசியாகிய மிஸ்டர் ஜயசேகரா சிங்களத்தில் ஒரு சொற்பொழிவாற்றினர். மிஸ்டர் டாசெல் பீரிஸ் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினர். தென்னிலங்கைக் கிராமப் புனருத்தாரண வேலையில் மிக முன்னேற்ற மடைந்திருக்கின்றதென்றும், யாழ்ப்பாணத்திலும் இவ்வேலையைக் கொண்டு நடத்துதற்குப் போதிய அம்சங்களிருக்கின்றனவென்றும், மேடைகளிற் கூடி நின்று பேசிவிட்டு அதனோடு அமைந்துவிடும் மகாநாடுகள் போலன்றி, இம்மகாநாடு செயலிலும் கருமம் புரிவது பாராட்டத் தகுந்ததென்றும், வேலையின் கண்ணியத்தைக் காட்டும் நோக்கமாகக் கமத்தொழில் வேலையோடு மகாநாடு ஆரம்பித்திருப்பது போற்றத் தக்கதென்றும் மிஸ்டர் ஜயசேகரா குறிப்பிட்டார்.

"கிராமப்புனருத்தாரண வேலையைச் செயலிற் கையாளத் தக்கதாகத் தாமாகவே முன்வருவோரைக் கொண்ட ஒரு தேசியத் தொண்டர் படையையும் பெண்கள் தரைப் படையையும் சேர்க்கவேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது" என்னும் தீர்மானத்தை கொக்குவில் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் திரு. M. கார்த்திகேசு பிரேரித்தார். அதாவது, இத்தேசியத் தொண்டர்படை மத்தியகிழக்கிலோ அல்லது ஐரோப்பாவிலோ எதிரிகளோடு பொருது யுத்தஞ் செய்வதற்காகவல்ல எங்கள் கிராமங்களிலுள்ள நோய், வறுமை, கல்வியின்மை, அறியாமை ஆகிய இந்தப் பகைவரை எதிர்த்துப் போராடுதற்கே தேவை யென்றும், கிராமப்புனருத்தாரணத்தில் பெண்களும் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், எங்கள் பெண்கள் இந்தியாவிலுள்ள சகோதரிகளைப் பின்பற்றி ஒழுகவேண்டுமென்று தாம் புத்தி கூறுவதாகவும் அக்கூட்டத்தில் சமூகமளித்திருந்த செல்வி சோமாவதி தமது வாழ்க்கையைத் தேசத்திற்காக அர்ப்பணஞ் செய்து ஒரு முன்மாதிரி காட்டியிருப்பதாகவும், அவரைப் பின்பற்றிப் பல பெண்மணிகள் தொண்டாற்ற முன்வரவேண்டுமென்றும் கூறினர். மகாநாட்டைத் திறம்பட நடாத்திய சங்க அங்கத்தவர்களையும் அவர் பாராட்டினர்.

திரு. C. சுப்பிரமணியம் B. A. அத்தீர்மானத்தை அநுமதிக்க, தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

அதன்பின், யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிறிண்டென் மிஸ்டர் சிட்னி. டி. சொய்சா, "சமூக ஊழியத்தின் மூலம் குற்றங்களைக் குறைத்தல்" என்னும் பொருள் பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன் சாரம் வருமாறு:—

பொலிஸ் வேலையும் சமூக ஊழிய வேலையும் ஒன்றோடொன்று மிகத் தொடர்புள்ளவை. அரசாட்சியாரின் சட்டங்களை நிலைநிறுத்தி அவற்றைப் பாதுகாத்து வரும் பொலிஸ்காரனது வேலை பொறுமைப்படத் தக்கதொன்றல்ல. ஆகவே என்போன்ற பொலிஸ்காரனை எவரும் விரும்பார். ஒரு காலமும் திருத்த முடியாத கைதேர்ந்த குற்றவாளிகளைத் தவிர, 100க்கு 95 வீதக் குற்றவாளிகளும் சமூகத்திலுள்ள குறைபாடுகளினாலேயே குற்றத்தைச் செய்கின்றார்கள். பல ஏழைகள் பொருளின்மையினாலும் போதிய கல்வியின்மையினாலுமே குற்றங்களைச் செய்கிறார்கள். அத்தகைய குற்றவாளிகளைப் பொலிஸார் திருத்தமுடியாது. 'சமூக ஊழியக் காரரே திருத்துதல்வேண்டும். இன்று இலங்கையிலுள்ள கிராமங்கள் மிக்க பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன. இலங்கையிலுள்ள பின்னணியிலுள்ள கிராமப் பகுதிகளிலுள்ள ஏழைகளுக்கும் நகரப்பகுதிகளிலுள்ள பணக்காரருக்குமிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தவேண்டும். நீங்கள் சாதித் துவேஷத்தை நீக்க முயலுங்கள். ஏனெனில், சாதிக்கட்டுப்பாடு என்ற திரைக்குள் மறைந்து நின்று பலர் பல குற்றங்களைச் செய்கிறார்கள். திறம்பட ஆற்றப்படும் சமூக ஊழியமே குற்றங்களை நீக்கவல்லது. நாட்டில் பொலிஸ் உத்தியோகஸ்தர்களே தேவைப்படாத ஒரு காலம் விரைவில் ஏற்படுமாக."

இதன்பின், பரிஸ்டர் மிஸ்டர். அசோகா ஜயவீரசேகரா "இளைஞர் இயக்கங்கள்" என்னும் பொருள் பற்றிப் பேசினர். இக்காட்டிலுள்ள இளைஞர்கள் சிந்திக்கவும் கருமமாற்றவுந் தலைப்பட்டுவிட்டார்கள் என்றும் அது பாராட்டத்தக்கதென்றும், அவர்கள் தங்கள் ஆற்றலையெல்லாம் சரியான வழியில் ஈடுபடுத்துவார்கள் என்று தாம் நம்புவதாகவும் அரசியலில் ஈடுபடாமற் றம் பணியை இயற்ற முயலுவார்கள் என்று நம்புவதாகவும் மேனாடுகளிலுள்ள ஆண்கள் சங்கங்கள் இளம் பெண்கள் சங்கங்கள் பெரிய பணிகளைச் செய்து வருகின்றனவென்றும், சாதித்துவேஷத்தை விட்டு இளைஞர் விடுதிகளை ஏற்படுத்தவேண்டுமென்றும் இவர் குறிப்பிட்டார்.

அடுத்தாற்போல, செல்வி G. சோமாவதியாற் சிங்களத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது "தன் அயலவனுக்கு உதவி செய்யாத ஒருவன் மோக்ஷமடைய அருகதையற்றவனாகின்றான்." என்று ஓர் ஐரோப்பிய தத்துவஞானி கூறினார் என்றும், நாம் அந்த உயர்ந்த லக்ஷியத்தின்படி ஒழுகுதல் வேண்டுமென்றும் சென்ற 400 வருஷங்களாக எமது உடல், உள்ளம் எல்லாம் மெல்ல மெல்ல அடிமை வசத்தாகிவிட்டனவென்றும் எல்லோரும் என்னென்னவோ எவ்வாறு செய்கின்றார்களென்றும், ஆயின் செய்யப்பெற்ற சீர்திருத்தமோ மிகமிகச் சிறிதென்றும் பெண்மணிகள் முன்வந்து தேசியப்பணியாற்றவேண்டுமென்றும், எல்லோரும் வித்தியாசங்களைப் புதைத்துவிட்டு "ஒன்றுபட்ட இலங்கை"யாகிய லக்ஷியத்தை நோக்கி நடக்க முன்வரவேண்டுமென்றும் அவர் கூறி முடித்தார்.

அதன்பின் செல்வி றசீதாபீபான் சாஹிப்பால தேசியப் பாட்டுகள் பாடப்பெற்றன.

அதன்பின், ஆங்கில இந்துசாதனப்பத்திராசிரியர் திரு V. காசலிங்கம் B. A. அவர்களால் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அவர் சில வருஷங்களின் முன் இருந்த இளைஞர்களுக்கும் இப்போதைய இளைஞர்களுக்கும் அதிகம் வேறுமை இருக்கின்றமையைத் தாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றதென்றும் இன்றைய இளைஞர்கள் தேசமுன்னேற்றத்திற்குரிய செயல்களில் ஈடுபடுவது போற்றத்தக்கதென்றும் தமது சொற்பொழிவிற் பாராட்டினர்.

அடுத்ததாக மிஸ்டர் டாசெல் பீரிஸ் தமது தலைமையுரையை நிகழ்த்தினர். சமூக ஊழியஞ் செய்வோர்க்கு நல்ல விசுவாசமுள்ள நோக்கம் வேண்டும் என்றும், உண்மைச் சமூக ஊழியன் அரசியலில் இறங்கக்கூடாதென்றும் பிரதிபலனைக் கருதக்கூடாதென்றும், திடமாக புத்தியை வளர்க்கவேண்டுமென்றும், உடலிலும் உள்ளத்திலும் தூய்மையும் வலுவும் உடையவராய் இருத்தல் வேண்டுமென்றும், சாதிமத நிறத் துவேஷங்களினின்று நீங்கவேண்டுமென்றும், நாட்டின் முதுகெலும்பு கமத்தொழிலேயாகுமென்றும், நாட்டிலுள்ள ஒவ்வொரு துண்டு நிலமும் பயிரிடப்படவேண்டுமென்றும், இன்னும் 30 வருஷங்களில் மகாவலிகங்கை நீர் கால்வாய்களின் மூலமாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்படலாமென்றும், ஒல்லாந்தில் நடைபெறுவதை அவதானிக்கும் போது அது நடக்கமுடியாத காரியமல்லவென்றும் பேசினர். மேலும் 20 வருஷங்களுக்கு முன் தாம் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது யாழ்ப்பாணத்தில் பிச்சைக்காரரையே காணவில்லையென்றும், ஆயின இன்றோ யாழ்ப்பாணத் தெருக்களில் பிச்சைக்காரர் பலரைக் காணக்கூடியதாகவிருக்கின்றதென்றும் இந்த 20 வருஷங்களுக்கிடையில் யாழ்ப்பாணம் இவ்வளவு மாற்றமடைந்திருப்பது வருந்தத்தக்கதென்றும், எல்லோரும் முதலில் தங்கள் கிராமமும், அதன் மூலம் யாழ்ப்பாணக் குடாநாடும் அதன் மூலம் இலங்கையும் அதன் மூலம் உலகமும் முன்னேற்றமடைவதற்காகப் பணி புரிதல்வேண்டுமென்றும் தாம் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்து தம்மாலியன்ற உதவிபுரிய ஆயத்தமாயிருப்பதாகவும் கூறி முடித்தார்.

அதன்பின் டிஸ்திரிக்ட் நீதிபதி திரு C. குமாரசாமி அவர்களால், கட்டுரை, பேச்சுத்திறமை விளையாட்டுத் திறமை முதலிய பகுதிகளில் சங்கத்தால் நடத்தப்பட்ட பரிசுப்போட்டியில் முதன்மை யடைந்தோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அதன்பின் சங்கத்தாருக்கு இயன்றளவு உதவி புரியுமாறு அவர் சபையோரை வேண்டிக்கொண்டார். இளைஞர்களும் முதியோரைத் தம்முடன் இணைத்துக்கொண்டு கருமமபுரியுமாறு புத்திமதியுங் கூறினர்.

அடிக்குப் பதில் அடித்துப் பயனில்லை

உயிரைக் கொடுத்து உதவுவதே உத்தமம்

பயந்தோடுவது பரிகாரமல்ல

வாலிபர்களுக்குக் காந்திஜீ புத்திமதி

வார்தா மே 24

வார்தாவிலுள்ள தேசிய வாலிபர் பயிற்சி விடுதியிலிருப்பவருக்கு மகாத்மா நேற்றிரவு ஒரு பிரசங்கஞ் செய்தார். அப்போது அவர் கலகம் நேர்ந்தாற் பயந்தோடுவது சரியல்ல, கலகத்தினிடையே காங்கிரஸ் காரர்கள் பயங்கொள்ளிகளைப் போல ஓடிவிட்டால், அவர்கள் இருந்து பயனில்லை. அவர்கள் மறையவேண்டியதுதான், பலாத்காரத்தாலன்றி அஹிம்சா முறையால் அவர்கள் காலாடிகளை நிறுத்தி நின்று கலவரத்தைத் தவிர்க்க வேண்டும். 1920-ம் வருஷ முதல் அதற்காகவே நான் முயன்று வருகிறேன்.

நான் வந்த காரணம்

தற்சமயம் நான் சேவாக்கிராமத்தை விட்டுவர விரும்பவில்லை. அங்கு எனக்கு வேலைகள் பல விருக்கின்றன. ஆனால் இந்த வாலிபர்கள் நான் வரவேண்டுமென முக்கியமாக விரும்பியதால தற்போது அவர்களுடன் கலந்து கொள்ள இன்று வந்திருக்கிறேன். இந்த விடுதியி லிருப்பவர்கள் சாதிக்கக்கூடிய காரியங்கள் பல விருக்கின்றன. ஏனெனில், ஆமதாபாத், டாக்கா, பீஹார், பம்பாய் முதலிய இடங்களில வகுப்புச் சச்சரவு அதிகமாக விருக்கிறது. கலகம் நடக்கும் இடங்களிற் சம்பவிக்கும் காரியங்களைக் கேட்டு, சும்மாவிருக்கக் கூடாது. கலகத்திற் காலாடிகள் தாக்கும் போது பயந்தோடுவது ஆண்மைத்தனமல்ல. அவ்வித நிலையிற் பழையபடி பலாத்கார வழியில் எதிர்ப்பது ஒரு வழி. அந்த அபாய நிலையில புதிய முறையில அஹிம்சா முறையில் தியாகத்துடன் அக்கக் காலாடிகளை எதிர்ப்பது இன்னொருவழி.

மிருகங்களும் எதிர்த்து நிற்கின்றன

மிருகங்களும் வேறு வழியில்லாமல் அகப்பட்டுக் கொண்டபோது தங்களைத் துன்புறுத்துவோரைத் தாக்க எதிர்த்து நிற்கையில் மனிதர்கள் மட்டும் கலக காலத்திற் பயந்து ஓடுவானேன்? சென்ற 20 வருஷங்களாக நான் எல்லாவற்றிற்குமொரே பரிகாரமாக அஹிம்சா வழியை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

உங்களைத் தாக்குவோரை எதிர்த்து நின்று கொல்ல வேண்டாம். அவர்களிடம் தாக்குண்டு உயிரைக் கொடுத்தாவது வகுப்பு ஒற்றுமையை நிலை நிறுத்துங்கள்.

தன்னலத் தியாகத்துடன் கூடிய இந்த வழியை நீங்கள் கற்றிருக்கிறீர்கள் என்றே நான் நம்புகிறேன்.

ஊழியர்களுக்குச் சோதனைக் காலம்

காங்கிரஸ்காரர்களுக்கு இப்போது ஒருசோதனைகாலம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் தற்சமயம் கலகத்தைத் தவிர்க்கக் காலாடிகளை ஆண்மைத் தனத்துடன் அஹிம்சா வழியில் எதிர்க்காது போனால் காங்கிரஸ் இருந்தே பயனில்லை. என் மனம் இப்போது இந்தக் கவலையில தானிருக்கிறது. பம்பாயிலிருந்து டெலிபோனில் அவ்வப்போது செய்திகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். காலாடிகளைத் தண்டிப்பதும் கலகத்தைத் தவிர்ப்பதும், அத்யாவசியம். ஆனால், நான் அதை அஹிம்சா வழியிற் சாதிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அப்போதுதான் காங்கிரஸ் இருப்பதற்கு ஒரு பயன் ஏற்படும். இந்தக் காரியத்தை நீங்கள் சாதித்தால் நான் இங்கு வந்ததால ஒரு நன்மை ஏற்பட்டதாகச் சந்தோஷிப்பேன்.

அடிக்குப் பதில் அடித்துப் பயனில்லை, உயிரைக் கொடுத்து உதவுவதே உத்தமம்.

வைஸ்ராயுடன் பேட்டி

ஸ்ரீ கே சீனிவாசன் சந்திப்பார்

ஸிம்லா, மே 24-

அகில இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் மகாநாட்டு நிரந்தரக் கோமிற்றியின் தலைவரும் ஹிந்து ஆசிரியருமான ஸ்ரீ கே சீனிவாசன் மே 29-ந் தேதியன்று வைஸ்ராயைக் கண்டு பேசுவார்.

கராச்சிச் சிறையில் உண்ணாவிரதம்

பந்தோபஸ்துக் கைதிக்கு அடி

கராச்சி மே 25

கராச்சிச் சிறையில் உள்ள பந்தோபஸ்துக் கைதி முக்திநாத உபாத்தியாயாவைச் சிறைச்சாலை அதிகாரிகள் சோதனையிட ஆரம்பித்தனர். இதை அவர் விரும்பவில்லை. ஆகவே, சிறைச்சாலைப் பிரதம உத்தியோகஸ்தரை அவர் அடித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு மேல் தற்காப்பை உத்தேசித்து அந்த அதிகாரி கைதியை மூக்கின்மேல் குத்தினர். இதைக் கேட்ட மற்ற ராஜீயச் சிறையாளர்கள் இரண்டுநாள் உண்ணாவிரதமிருக்க முடிவு செய்துவிட்டனர்.

யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம்

இக் கூட்டம் நடந்த 24-5-41-ல் சன்மார்க்க போதனா த்விபாஷா பாடசாலை மண்டபத்தில் வித்துவான் N. சுப்பையாபிள்ளை அவர்கள் தலைமையிற் கூடிற்று. அப்போது, கோப்பாய் ஆசிரியகலாசாலைப் பேராசிரியர் ஸ்ரீ A. சோமசுந்தரம் B. SC. அவர்கள் 'கணிதம்' பற்றியும்; வடபெரும்பாக வித்தியாதரிசி ஸ்ரீ A. J. R. வேதவனம் அவர்களும், பாடசாலை வைத்தியர் Dr. K. கனகரத்தினம் அவர்களும் 'மலேரியாசுரம்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். பின்னர்ப் புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. ஸ்ரீ R. திருநாவுக்கரசு B SC அவர்கள் தலைவராகவும் ஸ்ரீ V சுப்பிரமணியம் அவர்களும் ஸ்ரீ N. சேதுபதி அவர்களும் உபதலைவர்களாகவும் ஸ்ரீ K. தர்மலிங்கம் அவர்கள் காரியதரிசியாகவும் ஸ்ரீ E. குமாரசுவாமி அவர்கள் உபகாரியதரிசியாகவும் ஸ்ரீ E. P. குமாரசுவாமி அவர்கள் தனாதிகாரியாகவும் ஸ்ரீ P. ஆறுமுகம் அவர்கள் உப தனாதிகாரியாகவும் ஸ்ரீ E. கேதீஸ்வரநாதன் அவர்கள் கணக்குப் பரிசோதகராகவும் ஸ்ரீமான்கள் Y. T. பெண்டிற், பண்டிதர் யோசேப், S. D. கந்தப்பு, A. D. ஐயாத்துரை, N. தம்பிராசா, T. S. தியாகராஜஐயர், V. P. அருளானந்தம், பண்டிதர் S. இராசையா, வித்துவான் N. சுப்பையாபிள்ளை, K. நவரத்தினம், K. முத்துக்குமாரசுவாமி, பண்டிதர் K. தம்பையா ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டம் ஒன்றரை மணியளவில் இனிது நிறைவெய்தியது. —கடித

சர்வகலாசாலைக் கல்லூரிப் பிரவேசப் பரீக்ஷை

சென்ற புதன்கிழமை ஆரம்பமாகிய இலங்கைச் சர்வகலாசாலைக் கல்லூரிப் பிரவேசப் பரீக்ஷைக்கு 425 பேர் போயிருந்தனர். இவர்களிற் சிலர் 'கேம்பிறிட்ஜ்' பரீட்சைகளை யெழுதியவர்களென்றும் இவர்களுடைய பரீக்ஷைமுடிவுகள் இதுவரை கிடைக்காத போதிலும் தற்காலிகமாக இவர்கள் மேற்படி பிரவேசப் பரீக்ஷைக்கு அநுமதிக்கப்பட்டிருக்கின்றனரென்றும் அறியப்படுகிறது.

இலங்கை-இந்தியப் பிணக்கு

திரா வட்டமேஜை மகாநாடு கூட்டவேண்டும் என்று யோசனை

முற்றவெளிக் கூட்டத்தில் குடியேற்ற மசோதாக் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 26

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் முற்றவெளியில் இந்தியர் குடியேற்றத் தடைச்சட்ட விஷயமாக அத்வக்காத் திரு. ஏ. சுப்பிரமணியம் தலைமையில ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில இலங்கைத் தோட்டத் துரைமார்சங்கத் தலைவரான திரு. டி. ஈ. ஹாமில்டனிடமிருந்து கிடைத்த செய்தியொன்றும் படிக்கப்பட்டது. அச் செய்தியில் அவர் கூறியிருந்ததாவது:-

"அண்மையில் பிரசுரிக்கப்பட்ட அறிக்கையிற் சொல்லப்பட்டதற்கு அதிகமான உபயோகமான எதையுந் தெரிவிக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. தோட்டத் துரைமார சங்கத்துக்காவது எனக்காவது இலங்கையின் பொருளாதார சமநிலையைக் கவிழ்க்க வேண்டுமென்ற நோக்கம் சிறிதுகூடக் கிடையாது. இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடும் அதனதன் ஜனங்களின் நலன்களைக் கவனிக்கும் பொறுப்புள்ளனவாய் இருக்கின்றன.

பணத்தைச் செலவிடுவதனால் அதனால் வருமானம உயரவேண்டும். இல்லாவிடின் பணத்தைச் செலவிடக்கூடாது. இலங்கை மக்கள் பணத்தைக் கடன்வாங்கிப் பிரயோஜனமில்லாத விஷயங்களிற் செலவிடுகின்றனர். இது பெரிய தவறாகும்."

இலங்கையருக்குச் சேவை செய்வதில் ஆர்வம்

ஐரோப்பியர்கள் பணஞ் சம்பாதித்துக்கொண்டு திரும்பிச் செல்வதற்காக இலங்கைக்கு வருகின்றனரென்ற குற்றச்சாட்டை மிஸ்டர் ஹாமில்டன் ஆக்ஷேபித்திருக்கிறார். இந்நாட்டுக்குச் சேவை செய்வதற்காக அரசாங்கசபைத் தேர்தலிற் போட்டிபோட முன்வந்ததாகவும் தாம் எப்பொழுதும் இலங்கையில் வசிக்கும் ஜனங்களின் விஷயத்தில் மிகுந்த சிரத்தையுடனிருப்பதாயும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

திருவாங்கூர் திவான் மிஸ்டர் H. ஈ. கிறூன்ஹாம், மிஸ்டர். ஸி. ஜீ. ஸி. கெர், மிஸ்டர் எச் ஆர். பிறீமன் ஆகியோரும் பிறரும் கடிதங்கள் அனுப்பியிருக்கின்றனர் என்று காரியதரிசி மிஸ்டர் எம். என். எம். வன்னியசிங்கா அறிவித்தார். ஆயின் அக்கடிதங்கள் படிக்கப்படவில்லை.

குடியேற்றத்தடை மசோதாக்கள் கண்டனம்

அரசாங்கசபை முன்னிருக்கும் இரு குடியேற்றத் தடை மசோதாக்களையும் கண்டித்துத் தலைவர் ஒரு தீர்மானத்தைப் பிரேரித்தார். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே அவசரமாகத் தீர்த்துவைக்கவேண்டிய பிரதான பிரச்னைகளைச் சமரசமாகத் தீர்த்துவைக்கும் நோக்கத்தோடு இருநாடுகளையும் சேர்ந்த தலைவர்களடங்கிய வட்டமேஜை மகாநாடு ஒன்றைக் கூட்டுவது விரும்பத்தக்கதென்றும் அவர் தமது தீர்மானத்திற் குறிப்பிட்டார்.

• டாக்டர் ஸி. சிவசிதம்பரம் ஆமோதிக்கத் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

அரசாங்கசபை அங்கத்தவர்கள் லஞ்சம் வாங்குவதாகக் குற்றஞ்சாட்டப்படுவது பற்றி விசாரணை செய்வதற்கு ஒரு கொமிஷன் நியமிக்கவேண்டுமென ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது. மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன.

திரு. சுப்பையா தமது சொற்பொழிவில திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயகாவைத் தாக்கிப் பேசினர். திரு. பண்டாரநாயகா அவரது சொந்தச் சௌகரியங்களின் பொருட்டுப் பதவியிலிருந்து விலகிக்கொள்ள விரும்பவில்லையென்றும் அரசாங்கம் இன்னும் கொஞ்சம் நெருக்கினால் திரு. பண்டாரநாயகா இந்தியர்பக்கத்தில் சேர்ந்துகொண்டு அவர்களுக்காகப் பரிந்துபேசவும் கூடுமென்று திரு. சுப்பையா கூறினர்.

அரியசந்தர்ப்பத்தை இழந்துவிட்டாராம்

இலங்கையின் விடுதலைக்காக ஒரு தியாகத்தைச் செய்து எதிர்காலத்தில் வரவிருக்கும் சந்ததியினருக்கு ஒரு முன்மாதிரி காட்டுவதற்கு வாய்த்த ஒரு அரிய சந்தர்ப்பத்தை திரு. பண்டாரநாயகா இழக்கவிட்டாரென்றும் திரு. சுப்பையா கூறினர்.

அரசாங்கசபை அங்கத்தவரான திரு. நடேசஐயர் பேசுகையில் இலங்கை பிரிட்டிஷார் கைக்கு வந்தபின்னர், இந்தியர் எவ்விதம் இங்கு குடியேற்றப்பட்டனரென்பதைச் சுருக்கமாகக் கூறினர்.

தலைவர்களின் பயம்

தற்போதைய இலங்கை இந்தியப் பிரச்னை திருப்திகரமாகத் தீர்த்து வைக்க முடியாத அவ்வளவு சிக்கலான பிரச்னையல்லவென்றும் இரு தேசங்களுக்கு மிடையே சமரசம் ஏற்பட்டால் தமது தலைமைப் பதவிகள் போய்விடுமோவென்று இருதரப்பிலுமுள்ள தலைவர்கள் அஞ்சுகின்றனரென்றும் இந்த நிலைமையை நீடிக்கவிடுவதினால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் தீங்கு விளையுமென்றும் திரு. நடேசய்யர் தெரிவித்தார்.

சலவையாளர் முறையீடு

சென்னை, மே 17

இந்நாட்டில் நிகழும் சுவைதரும் செய்திகளில் ஒன்று சலவை செய்வோரின் முறையீடாகும். சலவை செய்வோர் (வண்ணார்) தங்கள் தொழிலைச் சில உயர்சாதி இந்துக்கள் செய்யத் தலைப்பட்டுவிட்டனர் என்றும் இதனால் தங்கள் தொழில் பாதிக்கப்படுகின்றதென்றும், அவ்வாறு செய்யாமல் அவர்களைத் தடுக்கவேண்டுமென்றும் முறையீடு செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். சென்னை மாகாணச் சலவையாளர் மகாநாட்டின் தலைவரால் இது [illegible]ரையிற் குறிப்பிடப்பட்டது. சில வருஷங்களாகத் தென்னிந்தியாவிற் சில பிராமணர்கள் சலவை வேலை செய்யத் தலைப்பட்டிருக்கின்றனர் என்பது எவர்க்குந் தெரிந்ததொன்றாகும். நாயுடு வகுப்பைச் சேர்ந்த சிலர் சலூன்களில் நாவிதவேலை செய்யவும் ஆரம்பித்திருக்கின்றனர். இவர்கள் தங்களுக்கு வேலையின்மை காரணமாகவே இத் தொழிலை மேற்கொண்டிருப்பதாக வாடிக்கைக்காரர்களுக்கு மிகச் சிரமப்பட்டு விளக்க முயல்வதையும் அவதானிக்கக்கூடியதாக விருக்கிறது.

கரவெட்டியில் விசர் நாயால் திகில்

15 பேரைக் கடித்தபின் கொல்லப்பட்டது

யாழ்ப்பாணம், மே, 25-

பருத்தித்துறையைச் சேர்ந்ததும் மிக்க ஜன நெருக்கமுள்ளதுமான கரவெட்டியென்னும் கிராமத்தில் விசர் நாயொன்று ஓடித்திரிந்து ஆட்களைக் கடிப்பதாக ஒரு செய்தி பரவியதும் நேற்று மாலை 4மணிவரை மேற்படிகிராமத்திற் சனங்களுக்கிடையே பெரிய திகிலும்பரபரப்பும் ஏற்பட்டன.

கரவெட்டி வடக்கு கிழக்கு மேற்கு முதலிய பகுதிகளைச்சேர்ந்த 15 ஆடவரும் ஸ்திரீகளும் மேற்படி விசர்நாயாற் கடிக்கப்பட்டு இன்று காலை யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியிற் சிகிச்சைக்காக அநுமதிக்கப்பட்டனர்.

ஈற்றில் கடிக்கப்பட்டவர் தைரியமாக அந்நாயின் தொண்டையைப்பற்றிப் பிடித்துக்கொண்டு மற்றவர்களின் உதவியோடு அதைக் கொன்று விட்டார்.

1941-ம் ஞு ஆனி மாதத்தில் மதுபானத் தீர்வைப்பகுதியில் காவலாளராக (காட்மாராக) வேலை பழகுவோருக்குக் காலியாகவுள்ள இடங்கள்

மேற் சொல்லிய காலியாகவுள்ள இடங்கள் 20 இருக்கின்றன. [illegible] விண்ணப்பப் பத்திரங்கள் மதுபானத் தீர்வைச் சுப்பிரின்டென்டன்ட் [illegible] 1941-ம் ஞு ஆனி மீ 14 உ [illegible] 12 மணி [illegible] மதுபானத் தீர்வைச் சுப்பிரின்டென்ட் [illegible]

2 [illegible] மதுபானத் தீர்வைச் சுப்பிரின்டென்டனிடம் [illegible] "கஜெற்" [illegible]

3 "கஜெற்" [illegible]

4 [illegible]

[illegible]
மதுபானத்தீர்வைக் [illegible]
P. O. Box, 543
கொழும்பு 1941-ம் ஞு வைகாசி மீ 20 உ
G 7 29-5-41

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

வெள்ளி மே 30

முதல் ஒலிபரப்பு

காலை 7.30 கீதாரம்பம் 7.45 தமிழில் செய்திகள் 7.55 முகமத்கனி 8.05 கவ்வாலிகள் (இசைத்தட்டு) 8-20 நேயர்விரும்புவது 8.50 ஆங்கிலத்தில் செய்திகள் 9.00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1.00 நக்ஷத்திர பவனி 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 [illegible] 2.00 தமிழில் செய்திகள் 2.05 கோடைக்கல்வி 2.30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை 5.00 வாத்தியசங்கீதம் 5.15 மைசூர் டி. சௌடையா வயலின் 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கண்டதேவி திருவேங்கடம் 6.30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 நம்தாய்மொழி 7.15 எங்கள்தபாற்பெட்டி 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் 7.50 மைசூர் டி. சௌடையா வயலின் 8.30 உலக விவகாரங்கள் 8.45 கண்டதேவி திருவேங்கடம் 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 10.00 ஒலிபரப்புமுடிவு.

சனி மே 31

முதலாவது ஒலிபரப்பு

காலை 7.30 கீதாரம்பம் 7.45 தமிழில் செய்திகள் 7.55 இராமாயணவிளக்கம் 8-05 பஜனை 8-20 ஏ. டி. ஸி. சந்தானமும், ஏ. ஏ. கோவிந்தனும் பாட்டு 8.50 ஆங்கிலத்தில் செய்திகள் 9.00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1.00 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 இசைத்தட்டுகள் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 கே. பி. தேவராஜுலு ஸாக்ஸோபோன் 2.00 தமிழில் செய்திகள் 2.05 ஏ. டி. ஸி. சந்தானமும், ஏ. ஏ. கோவிந்தனும் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை 5.00 வாத்திய கீதம் 5.15 வேலூர் எஸ். குப்புச்சாமி கிளாரினெட் 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 'பூஜா' (இசைத்தட்டு) 6.10 இசைப் பயிற்சி 6.30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7.00 செய்திச் சுருள் 7.15 இருகுரலிசை (இசைத்தட்டு) 7.30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் 7.50 ரேடியோக்கச்சேரி செம்பை வைத்யநாத பாகவதர் பாட்டு மைசூர் டி. சௌடையா வயலின் டி. ஏ. மீனாக்ஷி சுந்தரம் மிருதங்கம் 8.30 காலஅறிவிப்பு 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 10.00 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு யூன் 1

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7.50 தேவாராதனை 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.25 ஸ்ரீமதி தங்கம்மாராவ் 9.00 ஒலிமலர் 10.00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1.00 திரைகளிலிருந்து (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 கோனேரி ராஜபுரம் 2.00 தமிழில் செய்திகள் 2.05 வாத்திய வகைகள் (இசைத்தட்டு) 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை 5.00 வாத்திய கீதம் 5.15 ஸ்ரீமதி லக்ஷ்மி 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 ஸ்ரீமதி தங்கம்மா 6.30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7.00 நடைமுறை நிகழ்ச்சி 7.15 நேயர்விருப்பம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி லக்ஷ்மி 8-30 கோனேரி ராஜபுரம் 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 10.00 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் யூன் 2

முதல் ஒலிபரப்பு

காலை 7.30 கீதாரம்பம் 7.40 தமிழில் செய்திகள் 7-50 ராகமாலிகை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.25 என். ஆர். கிருஷ்ணமூர்த்தி 9.00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1.00 இருகுரலிசை 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 என். ஆர். கிருஷ்ணமூர்த்தி 2.00 தமிழில் செய்திகள் 2.05 கோடைக்கல்வி 2.30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றுவது ஒலிபரப்பு

மாலை 5.00 வாத்தியகீதம் 5-15 கே. வி. வெங்கடராமன் 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 ராதிகா 6.15 இசைப் பயிற்சி 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 மதராசிலுள்ளபடி 7-15 முப்பால் 7.30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் 7.50 மதராஸிலுள்ளபடி 8.30 காலஅறிவிப்பு 9.00 லோகமஹாதேவி 9.15 இடைவேளை 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 930 லண்டனிலிருந்து செய்திகள் 10.00 ஒலிபரப்பு முடிவு.

இலங்கையில் டிகாலின் பிரதிநிதி

மான்ஷியர்பாட் டி. புனிடாட் நியமனம்

மான்ஷியர் ஜே. பாட். டி. புனிடாட் என்பவரை ஜெனறல் டி. கால் இலங்கையில் தமதுஉத்தியோகப் பிரதிநிதியாக நியமனஞ் செய்திருக்கிறாரென்று அறிவித்துக் குடியேற்றநாட்டு மந்திரியிடமிருந்து ஒருதந்தி கிடைத்திருக்கிறது.

சுயேச்சைப் பிரஞ்சுப்படையை அமைக்கும் ஸ்தல பிரதிநிதியாக மான்ஷியர்பாட்டி புனிடாட்டை இலங்கை அரசாங்கம் உத்தியோகரீதியாக அங்கீகரித்திருக்கிறது.

அன்வின தயை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இகழ்வார், பொறுமைகொண்டவ மதிப்பார், நகைப்பார் யாவரையும் பொறுத்தல் வேண்டுமென்பார் "புவிப்பொறை" என்றார். "அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை-யிகழ்வார்ப் பொறுத்த றலை" என்ற திருவள்ளுவனார் கூற்றும் நோக்குதற்குரியது. திருவள்ளுவர் குறள் ஒன்றனைச் சிறிது மாற்ற "இன்மையு ளின்மை விருந் தொரால் வன்மையுள்-வன்மை மடவார் பொறை" என ஆகி, ஆசிரியர் (தேவர்) கருதாத கருத்தொன்ற எமது கருத்தைவலியுறுத்த வெளிப்படும்.

அழகால் ஒவ்வொரு கணமும் உலைக்கப்படுவாராய வரைவின் மகளிரைக் குறிக்க "வன்னமுலை" (வன்னம் உலை) என்றார். இனி, "அழகை உலைக்கின்ற" எனினுமாம். கள்ளிரவென்றும் பகலென்றும் பாராது-அழகு உலைக்க-துயிலுமின்றித் தன்னை அலங்காரஞ் செய்து தன்னைச் சேரவருபவரைப் பார்த்துக் கொண்டிருப்பதனால் அங்ஙனங் கூறினர். "வன்னமுலை" ஆகுபெயராய்ப் பெண்ணைக் குறித்தது எனவும் அண்மை விளியாதலின் இயல்பாயிற்று எனவும் கூறுதல் தானும் பொருந்துவதாகும்.

நான் நேரம் பாராமல் தன்னை அலங்கரிப்பதே தொழிலாகக் கொண்டு காமுகர் வரவை எதிர் பார்த்துத் துயில் குறைந்து விழித்திருப்பாள் வேசியென்றும் அவளைப்போல துயில் குறைந்து விழித்திருக்க வேண்டுமென்றுங் கூறுவார் "வேசி துயில்" என்றார். ஆத்திசூடியில் "அனந்தலாடேல்" என்றார். "பெருமைசேர் கணவனுண்டபின்பு தானுகர்தலன்றேல் இருவிழிதுயில் விற்றஞ்ச லெழுதன்முனெழுதல்" பெண்ணியல்பாக வேண்டும் என்றது திருநெல்வேலிப் புராணம். "தனிவிலுண்டியர் துயில்மிகு மியல்பினர்" ஆகாப் பெண்களென்றது கந்தபுராணம். "கணவன் துயில கொள்ளக் கால் வருடிக் (கணவன் துயின்றால்) கணவன் துயின்ற பின் துயின்று எழுவதற்கு முன் எழுதல் வேண்டுமென்பர். திருவள்ளுவர் பாடிய "அடிசிற் கினியாளே!" என்ற தொடக்கும்பாட்டில் பெண்ணின் இலக்கணங்களையும் காண்கின்றோமல்லவா? அங்கே கால் வருடலும் பின் துயிலலும் முன்னெழுதலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. திருஞான சம்பந்தப் பெருந்தகையார் "தென்றலா ரடிவருடச் செழுங் கரும்பு கண்வளருந் திருவையாறே" என்கிறார். திரு. தென்றல் (Mr. Southwind என்க) அவர்கள் கால் உருவிக் கொண்டிருப்பக் கருப்பு நித்திரை புருகின்ற திருவையாறென்பது கருத்து. "மெல்லியன் மகளிர் கல்லவருடா" என்றது நெடுநல்வாடையும். வேசியர் இன்பத்தைக் கறுபுடை மகளிரிடைப் பெறும் இன்பத்துக்கு, ஒருபொழுதும்,ஒப்பாகக் கூறல் ஆகாது. "நறுந்தா துண்டு நயனில் காலை, வறம்பூத்துறக்கும் வண்டுபோல்குவம்" என்றதும் "பயப்பல வாகி, வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிர்" என்றதும் மணிமேகலை. வேசியர்இன்பத்தைப் பெரிதென யாம் எண்ணுவதா? அவரிடைப் பெறும் இன்பமா இன்பம்? எடுத்துக் காட்டு? "வேசி-துயில்-பாத்தை (இடம் பெறும்) சயன இன்பம்" எனக் கொள்ளலாமோ எனின் சாலாது போலும். வேசியர் "பொருள் கொண்டென்னுக் கெண்ணெய் போல அளந்து காட்டிப் பழிபடுபோகம்" விற்பார் எனவும் "பெய்படுமன்பிஞர்போல் விரும்பினர்க் கருதுருதங்கள் பொய்படு மின்பம்" கொண்டார் வேசியர் எனவும் திருவிளையாடற் புராணத்தால் அறிகிறோம். அல்லாவிட்டாலும், நூலாசிரியர் உள்ளன்பும் உயிரொன்றுமில்லாத வேசியர் சயனகால இன்பத்தைக் குறிப்பாரா? ஒரு பொழுதும் குறியார். திருவள்ளுவ நாயனார் "அன்பின் விழையார் பொருள் விழையுமாய் தொடியா-ரின்சொ லிழுக்குத் தரும்" எனவும் "பயன் தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்-நயன் தூக்கி நள்ளா விடல்" எனவும் வலியடையக் கூறினார்.

"பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையிலேதில் பிணந் தழீஇ யற்று" என்ற ஒப்பில் குறள்-தப்பற பொருளைத் தகர்த்தெறியும் பொக்கி-"வேசிகள் இன்பம்" என்ற கருதவும் விடுகின்றில்லது. "கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையுடைய முயக்கம், பிணமெடுப்பார் இருட்டறையின் கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற் போலும்" என்றது பரிமேலழகர் உரை. ஆசிரியர் தாமும் அதையே-'இருட்டறையின் கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற் போல'த் தழுவுவதையே-குறித்தார் எனல் நருமமாகாது.

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதலாள்வினையோ-டைந்துடன் மாண்ட தமைச்சு" என்பது முதலாகத் திருவள்ளுவனார் கூறிய யாவற்றையும் சேர்க்கவிரும்புவார் "விறன் மந்திரி மதி" என்றார்.

பெண்ணுப் பிறந்தவர் யாவருக்கும் இங்கு காட்டப்பட்டவை அமைதல் வலியுறுத்துவார் "இவையுடையாள் பெண்" என்றார்.

உரைவிளக்கம் சிறிது விரிந்துவிட்டதோ என ஐயுறுகின்றேன். விரிந்தாலும் காரியமில்லை; உரைவிளக்கங்கள் சிறிது விரிந்திருப்பதைத் தான் இன்றைய அறிஞர்கள் விரும்புவார் என்பது எனது அபிப்பிராயம். நமது பழைய தமிழ் நூலகளெல்லாம்-விளக்கமற்ற உரைகள் இப்போது எழுமையாலும்-கவனிக்கப்படாது கிடக்கின்றன. இதை உணர்ந்து திரு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் ('நாவலர்' என்று கருதுகிறேன்.) மிகவும் முயற்சி செய்வதாக எனது நண்பர்கள் சிலரால் அறிகிறேன். நாமும் நல்ல உரைகளை இயற்றி-நயங்களைக் காட்டி-எழுதுவதைவிட்டு, வெறும் வாயால் "மாமனாய் வந்து வழக்குரைத்தது" என்றும் "சீமந்தனிபாவலே" என்றும் பாடமாக்கி-பழங்கதை போலச்-சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது; போதாது. நமது மொழி பரவவேண்டும்; நாடு சிறக்க வேண்டும்; நல்ல வசனநடையில்-கட்டுரைகளடங்கிய-நூல்கள் தோற்றவேண்டும்.

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல்
நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்"

என்றார் பாரதியார். வாய்ப்பறை சாற்றிக் கொண்டிருக்க வேண்டாம் என்றது அவர் கருத்து. தமிழை வளம் பெறச் செய்ய வேண்டும் என்று பாரதியார் கருதி

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்ற வேண்டும்"

என்றும் கூறிவிட்டார். நம்மவருள் ஒரு நண்பர் "பேசுவதே பெருமை பயன்தரும். கடுதாசியில் (பத்திரிகையில்) பொறிக்கப்படும் கட்டுரைகள் வாசிக்கப்படாமல் பினி சர்க்கரை கட்டப்படும்" என்று கூறியதை நான் நேரிற் கேட்டிருக்கிறேன்; அதை மறந்துபோகிய நியாயமும் கூறியிருக்கிறேன். அவர்கள் இனியாயினும் உண்மை உணர-உணர்ந்து உய்ய-திருவருள் முன்னிற்பதாக.

"ஆய கலைக ளறுபத்து
நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை
—தூய
உருப்பளிங்கு போல்வாளென்
னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்"

மலையுச்சியின் கொடூர வெய்யில்!
தாகசாந்தித் தருமம்

ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்தில் கே. வி. மார்க்கண்டு மடத்துப் பக்கமாகச் சென்ற 11 வருடமாக அடியார்கட்குத் தாகசாந்திக்காக ஒரு தண்ணீர்ப்பந்தல் செல்வக் கதிர்காமம் போகும் கடுப்பாதையில் பெரியோர்களின் உதவியால் அடியேனால் நடைபெற்று வந்தது. மேலும் அநேகருடைய வேண்டுகோளுக்கிணங்கிச் சுவாமி மலைக்குப் போகும் பழைய பாதையிலும் தண்ணீர்ப் பந்தல் அமைத்துத் தாகசாந்தி அளிக்க நிச்சயித்துள்ளேன். ஆதலால் தர்மப் பிரபுக்கள் இயன்ற பொருளுதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
தொண்டன்
சங்கரப்பிள்ளை முருகேசு,
(கொட்டைக்காடு) தொல்புரம்
யாழ்ப்பாணம் சுளிபுரம்.
Mis 31 12.5.41 . 11.6.41

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்
கள்சிமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரூப்சைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y. 19 4-3-41—3-3-42.

ஒலி இயலும் தமிழும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

போனதனால் இன்று எழுத்துக்களுக்கும் ஒலிகளுக்கும் ஆங்காங்கு வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. வழக்காற்ற வடமொழியில் பாணினியின் இலக்கணம் ஏற்பட்டதன் பின்னர் இத்தகைய மாறுதல்கள் எதுவும் ஏற்படவில்லையாதலால் வடமொழி எழுத்துமுறை இன்னும் ஒலியியல் முறைக்குக் கிட்டத்தட்ட ஒத்ததாக இருக்கிறது. இதற்குக் காரணம் வடமொழியாளர் தம் ஒலிப்பை யறிந்து எழுத்தைச் சரிப்படுத்திக் கொண்டதலது, எழுத்தை யறிந்து ஒலிப்பை அதற்குச் சரிப்படுத்திக் கொண்டதேயாகும் என்க.

மேற்காட்டியபடி வடமொழி ஒழிந்த பிறகு இந்திய மொழிகளிலும் தமிழிலும் எழுத்துக்களினின்று ஒலிகள் சற்று வேறுபடுகின்றன. இவ் வேறுபாடுகளின் வகைகளை இக்கட்டுரையில் முதன் முதலில் காட்டினோம். அவை ஓரெழுத்திற்கு இரு வேறொலிகளும், ஓர் ஒலிக்கு இரு வேறெழுத்தும் இவை போன்றன பிறவும் ஆம்.

எடுத்துக் காட்டாக, தந்ததனால் என்ற தமிழ்ச் சொல்லில் மூன்றிடங்களில் வரும் மூன்று தகரங்களும் மூன்று வேறு வேறு வகை ஒலி உடையவையா யிருப்பது காண்க. முதல் தகரம் கடினமயானது. இரண்டாவது மென்மையுடையது. மூன்றாவது தகரம் இடையினத்தைப் போல் திறந்த ஒலிப்பை உடையது. உயிர் எழுத்துக்களிலும் உழுந்து என்பதில் முதல் உகரமும் ஈற்று உகரமும் வேறு வேறு மாதிரி ஒலிப்பது காணலாகும்.

எனவே, பொதுப்படையாகத் தமிழ் ஒலிப்பைக் குறிக்கத் தமிழ் எழுத்துக்கள் போதுமாயினும் அறிவியல் முறையில் ஆராய விரும்பும் மொழியியலாருக்குத் தமிழ் ஒலிப்பின் நுண்ணிய வேறுபாடுகளைச் செவ்வனே குறிக்கக்கூடத் தமிழ் எழுத்துக்கள் போதியனவல்ல. தம்மூலலாத பிறமொழி ஒலிகளைக் குறிக்க அவை போதா என்பது கூறவேண்டியதில்லை.

இது தமிழ் மொழியின் குறைபாடு என்றோ தமிழ் எழுத்துக்களின் குறைபாடு என்றோ நாம் கருதிக் கவலை வேண்டியதில்லை. நாம் மேலே கூறியபடி உலகில் வேறெந்த மொழியையும் விடத் தமிழ் இவ்வகையில் ஒலியியல் உணர்ச்சியில் சிறந்ததெனபதை மேலே காட்டியுள்ளோம்.

ஆங்கிலமொழி இவ்வகையில் பல வழியில் தமிழை விடக் குறைபாடுடையதாயினும் ஆங்கிலேயர் அதனைத் தமது முயற்சியால் மாற்ற முயன்றுள்ளனர். ஆங்கில ஒலியியலாளர் ஆங்கில எழுத்துக்களை ஒட்டியும் வேண்டிய இடங்களில் ஆங்கில எழுத்துக்களுடன் சில குறியீடுகளைச் சேர்த்தும் ஒலியியல் வகைக்கான புதிய அரிச்சுவடி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர். இதன் துணைக்கொண்டு ஆங்கிலமொழியின் எல்லா ஒலிகளையும் தெளிவாக அறிவதுடன் பிறமொழி ஒலிகளையும் கூடக் குறியீடுகளால் பிரித்தறிந்து கொள்ளலாம்.

பின் வரும் பகுதிகளில் தமிழ் ஒலிகளை வகுத்து அவற்றுக்கு அத்தகைய குறியீடுகள் சேர்த்த ஒலியியல் அரிச்சுவடி ஒன்றைத் தற்காலிகமாக ஏற்படுத்துவதும், பின் அதன் துணையிலே பிறமொழிகளின் ஒலிகளையும் உண்பதும் இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

—செந்தமிழ்ச் செல்வி.

பேச்சிலும் எழுத்திலும் அடக்கம்

ராஜன் பாபுவின் உபதேசம்

மாங்கிர், மே 20—

ஹிந்து முஸ்லீம் சமூகத்தினர் நேற்று மாங்கீருக்கு வந்து ராஜன் பாபுவைக் கண்டபோது, அவர் கூறியதாவது:—

நான் சமாதானத் தூதனாக இம்மாகாணத்தைச் சுற்றி வருகின்றேன். ஹிந்துக்களில் ஒவ்வொருவரும் தனக்கு அடுத்துள்ள முஸ்லீம்களின் உயிருக்கும் உடைமைக்கும் தீங்கு நேராதிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்விதமே முஸ்லீம்களும் செய்யவேண்டும். இந்தக்கொள்கையை வற்புறுத்தவே நான் இப்போது சுற்றுப் பிரயாணஞ் செய்து வருகிறேன்.

வகுப்புக் கலவரச் சமயத்தில் அடக்கம் அதிகமாக வேண்டும். வாயை அடக்கிக்கொண்டிருப்பதோடு அதிகமாக எழுதுவதையும் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

டாக்டர் ராஜேந்திரபிரசாத் ஜமால்பூர் வாசிகளுக்குச் செய்த பிரசங்கத்தில் அவர்கள் மனம் மாறவேண்டுமெனக் கூறினார்.

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா
25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.
தேசீயகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிரந்தரமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
(வி) காரியாதிகாரி.
(Y. 22. 1-11-40 to 31-10-41)

குயீன்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்
குறைந்த விலை நிறைந்த குணம்
எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறுத நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.
இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
C/o S. Veeragathipillai & Sons.
(Y. 21. 11-8-40—10-8-41.)

வெளிவந்துவிட்டது!
புதிய வெளியீடுகள்
சிவிக்ஸ் (Civics) எனப்படும்
குடி இயல் நூல்
6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50
7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50
யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபைப்
பிரசுரமாக அச்சிட்டு வெளிவந்துவிட்டது
மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

சி. எம். சாமி
மன்மதக்
குளிகை
மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்
அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை
ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.
இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இலற்றைத்தரவல்லது. வெவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.
அச்சியகாட்டார் முன்பண மனுப்ப வேண்டும்
60 குளிகை ரூபா 5 20 குளிகை ரூபா 2
தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I
கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்
Y221 31-3-41 30-3-42

வியாபாரத்திற்கழகு விளம்பரஞ்செய்தல்
அதற்குகந்தது இந்துசாதனமே

சலவைசெய்தமல்லுகள்
மிகச்சிறந்த தரமுடையது
50" அகலமுள்ளது யார் ஒன்று 32 சதம் அல்லது 20 யார்கொண்ட துண்டு ஒன்று ரூ. 5-75
51" அகலமுள்ளது யார் ஒன்று 35 சதம் அல்லது 20 யார்கொண்ட துண்டு ஒன்று ரூ. 6/-
51" அகலமுள்ளது யார் ஒன்று 50 சதம் அல்லது 20 யார் கொண்ட துண்டு ஒன்று ரூ. 9/-
சில்லறை டிப்போ
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன்ட் வீவிங் மில்ஸ்.
சொந்தக்காரர்கள்: தி புறவிடென்ற் இன்வெஸ்மென்ற் கம்பெனி லிமிற்றெட்.
(இந்தியாவில் ஸ்தாபிதமானது)
Mis 127.19-12.40 அச்சுத்தவரின்பொறுப்பு வரையறுக்கப்பட்டது.

இருமல், இளைப்பு
சுகமானவர்
மதிப்புரை

மரைக்காயர் டிரேப்பரி ஸ்டோர்
112, 2-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.
"ஆஸ்துமா" என்னும் இருமல், இளைப்பு, சுவாச காசநோயால் நான் இரண்டு வருஷ காலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். தண்டபாணி வைத்திய சாலையில் சென்ற 1938 செப்டம்பர் மாதத்தில் நாளக பஸ்பமும் சித்திர மூலச் சூரணமும் ரூபா 12 சதம் 50 க்கு வாங்கி 25 நாள் சாப்பிட்டேன். நோயின் கஷ்டங்கள் நீங்கிச் சுகமடைந்தேன் பின்பு இதுவரை 2 வருடங்களாகியும் எனக்கு நோய் திரும்ப வரவில்லை. திடகாத்திரமாக இருக்கிறேன். என்னைப் பார்த்துவிட்டுச் சுமார் 100 பேர்கள்வரை தங்களிடம் மருந்து சாப்பிட்டுச் சுகமடைந்திருக்கிறார்கள். தங்களுக்கு என்றும் மறவாத நன்றி செலுத்துகிறேன். 19.10.40
(ஒப்பம்) E. A. M. S. மரைக்காயர்.
ஸ்ரீ M. S. மரைக்காயர்.
இருமல், இளைப்பு, காசம், க்ஷயம், பீனிசம், நமேன் நோய்களுக்கு
25 நாள் நாளக பஸ்பம் } ரூ 12-50
,, நாள் மூலச் சூரணம் }
நோய் விபரம் எழுதவும் கேட்லாக் இனாம்.
தண்டபாணி வைத்தியசாலை,
96 செட்டியார்தெரு, கொழும்பு
Mis 204 5-3-41 4-6-41

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1941)
பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம
மூலமும் உரையும்
பல வருடங்கள் J. S. C.; S. S. C பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய
திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள்
மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.
பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதி யொன்றின் விலை ரூபா 1 சதம் 10
தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்
இந்துசாதனம் 20.8-40
மனேஜர்.

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசங்க எல்லைக்குள்

தமிழ்	ரூபா 6-00	இங்கிலீஸ் தமிழும் 9-00
இலங்கை இந்தியா	8-00	இங்கிலீஸ் தமிழும் 12-00
தொலைநாட்டு பகுதி	9.00	இங்கிலீஸ் தமிழும் 13-00

தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

ஒருகலம் ரூபா 10-00	அரைக்கலம் ரூபா 5-00
கால்கலம் ரூபா 4-00	ஒரு அங்குலம் ரூபா 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

நான்கு சிடித்த விளம்பரங்கள் விசேட விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜருடன் நேரில் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யவும். கடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 29th May, 1941.